வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 05 30.11.2023 வியாழக்கிழமை இதழ் : 354 பக்கங்கள் : 16

# இலங்கை - இந்திய உடன்படிக்கை முழுமையாக அமுலாகவேண்டும்

## புதுடில்லியில் தமிழர் பிரதிநிதிகள் கூட்டாக வலியுறுத்து

புதுடில்லி, நவம்பர் 30

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக இந்தியா அக்கறை கொள்ள வேண்டும். அத்துடன், 1987 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியா முழு அக்கறையுடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு வடக்கு, கிழக்கு அரசியல், இந்து மத, சிவில் மற்றும் புலம்பெயர் சமூக அமைப்பு பிரதிநிதிகள் இந்தியாவில் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

11




## பதில் பொலிஸ் மா அதிபராக தென்னக்கோன் நியமனம்!

கொழும்பு, நவ. 30

பதில் பொலிஸ் மா அதிபராக மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்ரமரத்ன மீண்டும் பதவி நீடிப்பு பெற முடியாத நிலையில் ஓய்வு பெற்றார். இதையடுத்து பொலிஸ் மா அதிபர் பதவி கடந்த 25ஆம் திகதி முதல் வெற்றிடமாக இருந்தது.

இந்த நிலையில், மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதில் பொலிஸ்

11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வு பணிகள் இடைநிறுத்தம்

### மீண்டும் மார்ச் மாதம் ஆரம்பமாகும்

முல்லைத்தீவு, நவ. 30

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி மேலும் விரிவடைந்து செல்வதாக தெரிய வந்ததையடுத்து அகழ்வு பணிகளைத் தற்காலிகமாக நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுடன் நிறுத்தப்பட்ட புதைகுழியின் அகழ்வுப் பணிகள் அடுத்த ஆண்டு மார்ச் முதலாம் முதல் மீண்டும் ஆரம்பமாகும்

11



## பளை விபத்தில் இளைஞர் பலி!

கிளிநொச்சி, நவ. 30

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயங்களுக்கு உள்ளாகினர்.

கிளிநொச்சி - பளை - புலோப்பளை பகுதியில் நேற்று புதன்கிழமை மதியம் இந்த விபத்து இடம்பெற்றது. இதில், பளை நகரப் பகுதியை சேர்ந்த குணம் கணேசன் (வயது - 20) என்பவரே உயிரிழந்தார்.

பளை நகரப் பகுதியில் இருந்து புலோப்பளை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் புலோப்பளையில் இருந்து பளை நகரம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுமே நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகின.

இதில், சம்பவ இடத்திலேயே இளைஞர் உயிரிழந்தார். மற்றைய மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் பளை பிரதேச மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டனர். (ஐ)



பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட தேசபந்து தென்னக்கோன் நேற்று மதியம் கங்கராமை விகாரையில் வழிபடச் சென்றபோது...

## தென்னக்கோன் நியமனம் கர்தினால் ரஞ்சித் எதிர்ப்பு!

கொழும்பு, நவ. 30

பதில் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டமையை கடுமையாக எதிர்ப்பதாக தெரிவித்துள்ள பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, இது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை அவமதிக்கும் செயலா கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தென்னக்கோன் மீதான குற்றச்சாட்டுக்கள்

11

## போராளிகளை ஒத்த ஆடை; ஆறு பேரிடம் வாக்குமூலம்!

யாழ்ப்பாணம், நவ. 30

மாவீரர் தின நிகழ்வில் புலிகளின் பெண் போராளிகளின் ஆடைகளை ஒத்த உடையை சிறுவர்கள் அணிந்து வந்தனர் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஆறு பேரிடம் பொலிஸார் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர்.

கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக மாவீரர் நாளான கடந்த திங்கட்கிழமை நினைவேந்தல் நடைபெற்றது. இதில், விடுதலை புலிகளின் பெண் போராளிகளின் உடைகளை ஒத்த ஆடையை

11

## நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதே முதல் இலக்கு

### பதில் பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, நவ. 30

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே எனது முதல் இலக்கு. அத்துடன், அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், கப்பம் கோருதல் ஆகியவற்றால் ஏற்படும் அச்சுறுத்தல் தொடர்பில் செயல்பட எதிர்பார்த்துள்ளேன் என்று பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பதில்

11

### இளம் பெண் கூட்டு வன்புணர்வு:

## தண்டனை பெற்ற சிப்பாய்கள் நிரபராதிகளென விடுதலை!

கொழும்பு, நவ. 30

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கூட்டுப் பாலியல் வன்புணர்வின் பின் கொல்லப்பட்ட பெண்ணின் வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தினர் இருவரை நிரபராதிகள் என்று குறிப்பிட்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கடந்த 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர்

11

## ஐ. எம். எவ்வின் 2ஆம் கட்ட கடன் விரைவில் இலங்கைக்கு கிட்டும்!

கொழும்பு, நவ. 30

இலங்கையின் கடன்களை மறுசீரமைப்பது தொடர்பாக உத்தியோகபூர்வ கடன் குழு அரசாங்கத்துக்கு பதிலளித்துள்ளது. இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்) இரண்டாவது கட்ட கடன் விரைவில் நாட்டுக்கு கிட்டும் என்று கூறப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கு விரிவான நிதியளிப்பு வசதி தொடர்பான கடன் சலுகைகளுக்காக பின்பற்றப்பட வேண்டிய

11

# இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு காலத்தில் சிங்கள கடும் கோட்பாளர். மாவிலாறில் புலிகள் தண்ணீரை தடுத்து வைத்தபோது அதற்கு எதிராக இராணுவம் போர் தொடுக்க வேண்டும் என்று அங்கே போராட்டம் நடத்தியவர்களில் முக்கியமானவர். ஒரு தடவை அவரைச் சந்தித்தபோது சொன்னார், அப்போது யுத்தத்தை தொடங்க மகிந்த ராஜபக்ஷகூட விரும்பியிருக்கவில்லை என்றும் தமது போராட்டமே அவரை யுத்தத்தை ஆரம்பிக்க அழுத்தம் கொடுத்தது என்று.

ஆனால், அவர் இந்த மாவீரர் தினத்திலன்று தனது முகநூலில் எழுதிய குறிப்பு ஒன்றை கூகுளில் மொழிபெயர்த்து இந்த ஊர்க்குருவிக்கு அனுப்பியிருந்தார். அவரது சிங்கள குறிப்புடன் சரிபார்க்க இந்த ஊர்க்குருவிக்கு சிங்களம் தெரியாது.

நமது தலைவர்கள் எங்களை சிங்களம் படிக்கவேண்டாம் என்று தடுத்துவிட்டு, தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கு சிங்களம் படிப்பித்திருக்கிறார்கள் என்று இப்போது நாம் ஆத்திரப்படுவதில் பயனில்லைத்தான்.

அதுவல்ல இன்று இங்கே எழுத வருவது. அவரின் அந்த மாவீரர் தினக் குறிப்பை படித்து முடித்ததும், சிங்கள மக்கள் மத்தியில் இப்படியான மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை அறிகின்றபோது மகிழ்ச்சியாக இருந்தது.

அதனால் அவரது அந்த குறிப்பை இன்று இந்தப் பத்தியில் அப்படியே தரலாம் என்று நினைக்கின்றேன்.

நவம்பர் 27 புலி மாவீரர் தினம்...!

இந்த நாளில், பிரபாகரன் தனது தேசத்தில் உரையாற்றுவார். தனது தியாகிகளை நினைவுகூரும் வகையில் உரையாற்றுவார். தீபம் ஏற்றி மரியாதை செலுத்துகிறார். இவை எல்லாம் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர். இலங்கை இராணுவத்தின் மீது பெரும் தாக்குதல்களை நடத்தியும் சிங்கள எல்லைக் கிராமங்களைத் தாக்கியும் நாட்டின் ஏனைய பகுதிகளைக் குறிவைத்து வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தியும் இந்த நாளை விடுதலைப் புலிகள் கொண்டாடி வந்தனர். 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த நாள் உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் பெரும் கவனத்தை ஈர்த்தது. வங்குரோத்து நாட்டின் வரவு - செலவுத் திட்ட உரையை கேட்பது போல் ஒரு நாடு என்ற ரீதியில் அனைவரும் பிரபாகரனின் உரையைக் கேட்க வரிசையில் நின்றனர்.

அப்போது புலிகள் அமைப்பை தோற்கடிக்க முடியாது. அதன் தலைவர் பிரபாகரனை அழிக்க முடியாது - இவர் அழிக்க முடியாதவர் என்று பலர் நம்பினர்.

2009இற்கு பிறகு, பிரபாகரன் மற்றும் புலித் தலைவர்கள் இல்லாமல் குண்டு வெடிப்புகள் மற்றும் கொலைகள் இல்லாமல் கொண்டாடப்படும் பதினான்காவது புலிகளின் மாவீரர் தினம் இன்று. விடுதலைப் புலிகளின் தலைவர் 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி மாவீரர் தினத்தை ஆரம்பித்தார். இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சங்கர் எனும் செல்லச்சந்திரன் சத்தியநாதன் நினைவாக. தாக்குதலில் பலத்த காயம் அடைந்த அவர் ஏழு நாட்களின் பின்னர் நவம்பர் 27 அன்று இறந்தார். இதன் காரணமாக நவம்பர் 20 முதல் 27 வரை மாவீரர் வாரமாக பிரபாகரன் பெயரிட்டார்.

பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் மறைந்த போதிலும் கடந்த 13 வருடங்களாக வடக்கு, கிழக்கில் பல்வேறு வடிவங்களில் இந்தத் தினம் நினைவுகூரப்பட்டது. இவர்களுக்கு எதிராக பல்வேறு ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டு இன்று அந்த எதிர்ப்புகள் மெலிந்து விட்டன. சிலர் அதை அலட்சியமாகப் பார்த்துவிட்டு, வருடத்துக்கு ஒருமுறை கொண்டாட்டமாக வரும் இன்னொரு நிகழ்ச்சியாகப் பார்த்திருக்கிறார்கள்.

எனினும், இம்முறை பிரபாகரனின் மகள் துவாரகாவை உயிர்ப்பிக்க குழுவொன்று தயார் நிலையில் இருப்பதாக புலனாய்வு அமைப்புகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்தத் தகவலின் படி, நோர்வேயில் வசிக்கும் புலிகளின் சர்வதேச வலையமைப்பு ஏ. ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவளது அழகையும் குரலையும் உலகுக்கு முன்னால் உருவாக்க முயற்சிக்கிறது. பிரபாகரனின் மகள் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்பதை உலகுக்கு உணர்த்தி புலம்பெயர் தமிழர்கள் மூலம் நிதி திரட்ட வேண்டும். இதன் மூலம் பிரபாகரனின் மூத்த மகளின் உருவத்தையும் குரலையும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் புனரமைக்க பிரபாகரனின் மனைவி மதிவதனியின் தங்கையான அருணா அதாவது துவாரகாவின் சிறிய தாயார் முன்வந்துள்ளார். அவர் டென்மார்க்கில் வசிக்கிறார். இந்த ஆண்டு மாவீரர் கொண்டாட்டத்துக்காக துவாரகாவின் உருவத்தை உலகுக்கு கொண்டு வர இந்த குழு திட்டமிட்டிருக்கிறது. அவர்கள் இதைச் செய்வதற்கு இன்னும் ஒரு காரணம் இருக்கிறது. அதாவது போரின் இறுதி நாட்களில் நடந்த சண்டைகளில் பிரபாகரனின் சடலம் போல் பிரபாகரனின் மனைவி மதிவதனியின் உடலை உலகம் பார்க்க முடியவில்லை. எனவே, துவாரகாவும் மதிவதனியும் இன்னும் உயிருடன் இருக்கின்றனர் எனப் பல புலி ஆதரவாளர்கள் இன்னும் நினைக்கிறார்கள். எவ்வாறாயினும், இந்த வலையில் தமிழ் சமூகம் விழ வேண்டாம் என்று நோர்வேயில் உள்ள பிரபாகரனின் மருமகன் ஒருவர் கூறுகிறார். தமிழ் மக்கள் எதிர்காலத்தை எதிர்கொள்ள வேண்டுமாயின் கடந்த காலத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

எனினும், இன்று வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை கொண்டாடும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளனர். இதே வேளை, விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் வகையில் வடக்கு, கிழக்கு இரண்டு மாகாணங்களை மாத்திரம் காட்டும் வரைபடத்துடன் விடுதலைப் புலிகளின் நிறங்கள் மற்றும் சின்னங்கள் கொண்ட பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவிக்கப்படுகிறது. மாவீரர் வாரத்தை முன்னிட்டு இவ்வாறு பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையிலான அதிகாரப் போட்டியும் புலிகள் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு காரணம் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், புலிகளின் அரசியல் நோக்கங்களையும் பிரிவினைவாதத்தையும் மேம்படுத்துவதற்கு இடமளிக்காமல் கவனமாக இருக்க வேண்டும். அதே வேளை தமிழ் மக்கள் தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கான அமைதியான அகிம்சை நினைவேந்தல் உரிமையை தடுக்கக்கூடாது.

இதுவே அந்த சிங்கள அரசியல் பிரமுகரின் மாவீரர் தினச் செய்தி.

அவர் எழுதிய பல விடயங்களில் இந்த ஊர்க்குருவிக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், ஒரு சிங்கள தேசியவாதி இப்படியும் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார் என்பதை பதிவு செய்வதற்காகவே இதனை இங்கே தந்திருக்கின்றேன்.

**- ஊர்க்குருவி.**

# புலிகளின் சின்னத்துடன் ரீசேர்ட் அணிந்த இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம், நவ. 30

விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னம், அதன் தலைவர் பிரபாகரனின் படங்கள் பொறித்த ரீசேர்'ட் அணிந்த இளைஞரை எதிர்வரும் டிசெம்பர் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைதான இளைஞர் மாவீரர் நாளன்று கொடிகாமம் துயிலும் இல்லத்தில் நாட்டில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னம் அவரின் படத்தைப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இராணுவ புலனாய்வார்களால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பயங்கரவாத தடை சட்டத்தின் விதிகளின் கீழ் அந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

நேற்று இவர், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கில், சந்தேக நபரிடம் விசாரணை மேற்கொள்ள பொலிஸார் மேலும் கால அவகாசம் கோரினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் அந்தோனிப்பிள்ளை யூட்சன் சந்தேக நபரை டிசம்பர் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஐ-03)

# குற்றச்செயல்களுடன்தொடர்பு; நான்கு சந்தேகநபர்கள் கைது!



முல்லைத்தீவு, நவ. 30

புதுக்குடியிருப்பில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய போதைக்கு அடிமையான இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு மற்றும் அதன் அயல் பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் கைதான இளைஞர் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு - கைவேலியை சேர்ந்த 29 வயது இளைஞரே இவ்வாறு கைதானார். அவரிடம் இருந்து 16 எரிவாயு சிலிண்டர்கள், தண்ணீர் மோட்டார், சைக்கிள், வயர்கள், கதிரைகள், தங்க நகைகள் என்பவற்றை தாம் மீட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

கைதான இளைஞர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. மேலும், இவர் முதியவர்களை இருக்கும் வீடுகளை குறிவைத்து குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து மேலும் மூவரை கைது செய்ததுடன், ஒட்டோ ஒன்றும் மீட்கப்பட்டதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(ஐ-10)

# மகிந்த, ஜோன்ஸ்டன் பயணித்த ஜீப் அதிவேக வீதி தடுப்பு வீழ்ந்து சேதம்!

கொழும்பு, நவ. 30

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகி யோர் பயணித்த ஜீப் மத்திய அதிவேக வீதியில் குருநாகல் யக்கஹபிட்டிய பாதையிலிருந்து வெளியேறும் போது, கட்டணஞ் செலுத்தும் கரும பீடத்துக்கு அருகே இருந்த தடுப்பு வீழ்ந்து சேதமடைந்தது.




நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குறித்த சொகுசு ஜீப்பின் முன்பக்க கண்ணாடியும் வாகனத்தின் ஒரு பகுதியும் சேதமடைந்துள்ளன.

மகிந்த ராஜபக்க்ஷ மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் அநுராதபுரம் நோக்கி சென்று கொண்டிருந்தபோது, அவர்கள் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் குருநாகல் யக்கஹபிட்டிய பகுதியில் வெளியேறி செல்ல முயன்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் மோட்டார் சைக்கிள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பயணித்த ஜீப் ஆகியவை வெளியேறும் வாயிலைக் கடந்தவுடன், கட்டணம் செலுத்தும் கரும பீடத்துக்கு அருகிலுள்ள தடுப்பை அங்கிருந்த ஊழியர்கள் இறக்கிய போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
30.11.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எவ்வாறான அரசியல் சாத்தியம்?

சாத்தியங்களின் கலையே அரசியல் என்பார்கள். இது பற்றி 'ஈழநாடு'வில் ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியிருக்கின்றோம். யதார்த்தத்துக்குள் பலியாவது அல்ல அரசியல் - யதார்த்தத்தை நோக்கி இலக்கை வளைப்பதுதான் அரசியல் என்றும் விளக்கமளிப்பவர்கள் இருக்கலாம். ஆனால், இவைகள் எல்லாம் பேசுவதற்கும் கேட்பதற்கும் இனிமையாக இருக்கலாம். ஆனால், நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்று.

ஜனநாயக அரசியல் என்பது கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் உச்சளவில் பயன்படுத்திக் கொண்டு மக்களின் வாழ்நிலையை உயர்த்துவதாகும். மக்களை தொடர்ந்தும் பின்தங்கிய நிலையில் பேணிப் பாதுகாப்பதற்கு பெயர் அரசியல் அல்ல. மாறாக, நாம் முன்னெடுக்கும் அரசியல் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்க வேண்டும். இறந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வில் ஏராளமான மக்கள் ஒன்று திரளுகின்றனர் என்றால் அதன் பொருள் மக்கள் தொடர்ந்தும் வறுமையில் வாடவும் நெருக்கடிகளை எதிர்கொள்ளவும் தயாராக இருக்கின்றனர் என்பதல்ல. உண்மையில், வசதியுள்ள ஒரு மத்தியதர வர்க்கம் - முக்கியமாக யாழ். குடாநாட்டைச் சேர்ந்த மத்தியதர வர்க்கம் ஏற்கனவே நாட்டைவிட்டு வெளியேறிவிட்டது. அவர்களது அடுத்த தலைமுறை மேற்குலக நாடுகளின் தலைநகரங்களில் செல்வச் செழிப்புடன் வாழ்கின்றது. அந்த கவர்ச்சியின் விளைவாக எஞ்சியுள்ள மத்தியதர வர்க்கத்தினரும் கொஞ்சம் கொஞ்சமாக நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். இந்த நிலையில் தமிழ்த் தேசிய அரசியலை பாதுகாப்பதற்கான மக்கள் யார்? தங்களுடைய எதிர்காலம் தொடர்பில் கேள்விகளுடன் வாழும் ஏழைகளா?

உண்மையில், மண்ணை காப்பாற்றுவதற்கான முதல் தியாகம் என்பது அந்த மண்ணில் தொடர்ந்தும் வாழ்வதாகும். ஒரு சமூகத்தின் முன்னோக்கிய பயணத்தில் அந்த சமூகத்தின் மத்தியதர வர்க்கமே பிரதான சக்தியாகும். அவர்களே சமூகத்தின் முன்னோடிகள். ஆனால், ஆயுதப் போராட்டம் எழுச்சியுற்ற போது, யாழ். குடாநாட்டைச் சேர்ந்த வசதியுள்ள மத்தியதர வர்க்கமே முதலில் வெளியேறியது. ஆரம்பத்தில் ஆயுத விடுதலைப் போராட்டங்களில் மத்தியதர வர்க்கத்தை சேர்ந்த இளைஞர்கள் பலரும் தங்களை இணைத்துக் கொண்டனர். ஆனால், இயக்க மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவுடன் புலிகள் மோதும் முடிவை எடுத்த போது பலர் மண்ணைவிட்டு வெளியேறுவது தொடர்பிலேயே சிந்தித்தனர். உண்மையில் அப்போதே, ஆற்றலுள்ள மத்தியதர வர்க்கம் அரசியல் எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் மத்தியதர வர்க்கம் தொடர்ந்தும் வெளியேறிக் கொண்டே இருக்கின்றது. ஒன்றில் அரசாங்க பணிமனை மத்தியதர வர்க்கமாக இருக்கின்றது. இல்லையேல் புலம்பெயர் மத்தியதர வர்க்கமாக இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தற்போதுள்ள சூழலில் எழுச்சிவாதங்கள் மக்களை தொடர்ந்தும் வாழ வைப்பதற்கு பயன்படாது. அதற்கு மாறாக, இருப்பதை உச்சபட்சமாகப் பயன்படுத்திக் கொண்டு மக்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும். இந்த அடிப்படையில் தமிழ் கட்சிகள் தங்களின் ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தை வகுக்க வேண்டும். உடனடி - நீண்டகால - தூர நோக்கம் என்னும் அடிப்படையில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து பயணிப்பதன் மூலம் மட்டுமே மக்களுக்கு நம்பிக்கையூட்ட முடியும். மக்களுக்கு நம்பிக்கையூட்ட முடியாத ஓர் அரசியல் போக்கால் அவர்களுக்கு நம்பிக்கையூட்ட முடியாது. மக்களுக்கு நம்பிக்கையூட்ட முடியாத அரசியலால் எவ்வித பயனுமில்லை.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"*

**- கவிஞர் புதுவை இரத்தினதுரை**



# அராலி முதல் பொன்னாலை வரையான கரையோரத்தை கைப்பற்ற முயற்சி!

## சபா. குகதாஸ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவை மையமாக கொண்ட அராலி முதல் பொன்னாலை வரையான கரையோர பகுதியை வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் வளப் பிரதேசமாக ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது - என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா. குகதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"அராலி முதல் பொன்னாலை வரையான கரையோர பகுதி தொடர்பில் அண்மையில் பொது அமைப்புகளுடன் சங்கானை பிரதேச செயலாளர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

அதில், அப்பகுதி மக்கள் அராலி முதல் பொன்னாலை வரையான கரையோர பகுதியை வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் வளப்பிரதேசமாக ஒதுக்கீடு செய்வதை ஏற்றுக்கொள்ளவில்லை.

கரையோர பகுதி மக்களின் வாழ்வாதாரம் கடற்கரையை நம்பியே காணப்படுகின்றது. மாட்டு வண்டி சவாரி திடல், சுடுகாடுகள், விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. ஆகவே, வன வள பாதுகாப்பு திணைக்களத்தின் முன்மொழிவை முற்றிலும் எதிர்க்கிறேன்.

இதேவேளை, குறித்த பகுதியை வன வள பாதுகாப்பு திணைக்களத்துக்கு வழங்கினால் விகாரைகள், சிங்கள குடியேற்றம் வரவும் வாய்ப்புள்ளது என அப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.

எனவே, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் குறித்த முன்மொழிவை நிராகரித்து வன வள பாதுகாப்பு திணைக்களத்துக்கு கடிதம் அனுப்ப வேண்டும். இல்லையேல் இதற்கு எதிராக போராட்டம் நடத்துவோம்." என தெரிவித்தார்.

# உரும்பிராய் காளி கோவிலில் ஐம்பொன் சிலை திருட்டு!

யாழ்ப்பாணம், நவ. 30

உரும்பிராய் காளி கோயிலின் ஐம்பொன் அம்மன் சிலையும் அம்மனின் தாலி, தோடு என ஒன்றரை பவுண் நகையும் திருடப்பட்டுள்ளது. அத்துடன், அங்கிருந்த உண்டியலும் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தத் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று காலை 7 மணி அளவில் ஆலய பூசகர் ஆலயத்துக்கு பூசைக்காக சென்றபோதே இந்தத் திருட்டு சம்பவம் குறித்து தெரிய வந்தது.

இதையடுத்து, பூசகர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். (ஐ)

# டெங்கு நோய்க்கு மேலும் ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 30

டெங்கு நோயால் நேற்றுமுன்தினமும் ஒருவர் உயிரிழந்தார் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மரணத்துடன் நாட்டில் டெங்கு நோயால் இந்த ஆண்டில் இதுவரை 46 பேர் உயிரிழந்தனர் என்று பதிவாகியுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் இதுவரை 75 ஆயிரத்து 712 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# வீதியை கடந்த பெண் கார் மோதி உயிரிழப்பு

கொழும்பு, நவ. 30

வீதியை கடந்து கொண்டிருந்தவர் மீது கார் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

காலி - கொழும்பு பிரதான வீதியில் அம்பலாங்கொடை - மாதம்பகம வேனமுல்லையில் நேற்று புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


பெண்ணின் சடலம் பலப்பிட்டிய ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

வேனமுல்லை பிரதேசத்தில் தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்றை நடத்தி வந்த ஐம்பது வயது பெண்ணே உயிரிழந்தார்.

இந்த நிலையில் காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். விவாதங்களை தவிர்க்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வீடு மனை வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். உத்தியோகத்தில் உயர் அதிகாரி பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**கன்னி**
கடந்த கால சுகமான அனுபவங்கள் மனதில் நிழலாடும். நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். மரியாதைக் கூடும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். மேலதிகாரி ஆதரிப்பார். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். ஈகோ அதிகரிக்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**தனுசு**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். விலை உயர்ந்த சாதனங்கள் வாங்குவீர்கள். வாகனம் சிறு சிறு தொந்தரவு தரும். புது சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். நல்லன நடக்கும்.

**கும்பம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய அதிகாரி வழி வந்தவர்கள் ஆதரிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு 3.5 கிலோ தங்கக் கட்டிகள் கடத்தல்!

*சென்னை, நவ. 30*

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு நாட்டுப்படகின் மூலம் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 3.5 கிலோகிராம் தங்கக் கட்டிகளை திருச்சி சுங்கத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

பாம்பன் கடல் பகுதியில் சுங்கத்துறை அதிகாரிகள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது இலங்கையிலிருந்து சந்தேகத்துக்கு இடமாக நாட்டுப் படகொன்று வருவதை அவதானித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த படகை சுங்கத்துறை அதிகாரிகள் பிடிக்க முற்பட்ட போது, படகை விட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




இந்நிலையில் குறித்த படகை சோதனை செய்த சுங்கத்துறை அதிகாரிகள் படகில் இருந்த 3.5 கிலோ தங்கத்தை பறிமுதல் செய்துள்ளனர். அத்துடன் இது குறித்த மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# புலிகளின் தலைவர் பிரபா குறித்த கருத்து; தமிழச்சி தங்கபாண்டியனுக்கு கண்டனம்

*சென்னை, நவ. 30*

விடுதலை புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனை தேசிய தலைவர் என தி.மு.க எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் தெரிவித்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், அவரது கருத்துக்கு காங்கிரஸ், பாஜக சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் சென்னை திமுக எம். பி. தமிழச்சி தங்கபாண்டியன், ஆங்கில இணையத்தள நிறுவனம் நடத்திய நேர்காணலில் பங்கேற்றார். அப்போது, ஆளுமைமிக்க தலைவர் ஒருவரை சந்திப்பது குறித்த கேள்விக்கு, அவர் தேசியத் தலைவர் பிரபாகரன் என தெரிவித்ததுடன், அவரை சந்தித்தால் முள்ளிவாய்க்கால் சம்பவத்துக்கு மன்னிப்பு கோருவேன் என்றும் தெரிவித்தார்.

தமிழச்சியின் இந்த கருத்து சர்ச்சையாகியுள்ள நிலையில், பல்வேறு தரப்பிலும் கண்டன குரல்கள் வலுத்துள்ளன.

தமிழக காங்கிரஸ் செயல் தலைவர் மோகன் குமாரமங்கலம் தனது சமூக வலைதளப் பக்கத்தில் கூறியதாவது: முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கு இவர் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும். அந்த நிகழ்வுக்கு காரணம் திமுகதான் என்ற ஒப்புதல் வாக்குமூலமே இது என்பதை உணர்த்துகிறது.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறதோ? இந்தியாவில் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவரை, முன்னாள் பிரதமரை கொன்ற இயக்கத்தை வழிநடத்திய ஒருவரை தேசிய தலைவர் என்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சொல்வது தி.மு.கவின் ஆணவம். இப்போதுகூட இந்திய காங்கிரஸ் தலைவர்களுக்கு ரோஷம் வரவில்லை என்றால் அது வெட்கக்கேடே. இவ்வாறு கூறியுள்ளார்.

காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம் தெரிவிக்கையில்-

பிரபாகரனை புகழ்ந்து பேசுவதை காங்கிரஸார் யாரும் விரும்ப மாட்டார்கள். கொலை குற்றவாளியை ஹீரோ ஆக்க வேண்டாம். ராஜீவுடன் 17 பேர் கொல்லப்பட்டதை யாரும் பேசுவதில்லை. பிரபாகரன், வீரப்பன், தமிழ் தேசியம் என்பதெல்லாம் இந்துத்துவா தேசியவாதத்தை போன்றதுதான். விடுதலைப் புலிகளின் ரசிகர்களாக இல்லாமல் இலங்கைத் தமிழர்களுடன் நிற்க முடியும் என்பதை ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறார்.

பாஜக துணைத் தலைவர் நாராயண் திருப்பதி தெரிவிக்கையில்-

முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு திமுகதான் காரணம் என தமிழச்சி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். பிரதமரை கொன்ற இயக்கத் தலைவரை அவர் தேசிய தலைவர் என்று கூறியிருப்பது திமுகவின் ஆணவத்தை காட்டுகிறது. திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ் இனியாவது வெளியேறுமா?-என்றார்.

(அ)

# திருச்சி மாநிலத்தின் தலைநகராகும் காலம் வரும்!

*திருச்சி, நவ. 30*

தமிழகத்தின் மத்தியில் அமைந்துள்ள திருச்சி, மாநிலத்தின் தலைநகர் ஆகும் காலம் வரும் என தி.மு.க பொதுச் செயலாளரும், மாநில நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

தி.மு.க திருச்சி தெற்கு மாவட்ட அணிகளுக்கான கருத்துரை கூட்டம், திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வகித்து பேசும்போது, “2016ஆம் ஆண்டு நான் தேர்தலில் போட்டியிட விரும்பி திருவெறும்பூர் தொகுதியை கேட்டபோது, அந்த தொகுதியை கூட்டணிக் கட்சியை சேர்ந்தவர்களும் கேட்டார்கள்.

அந்த நேரத்தில் தற்போதைய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், இந்த தொகுதியை எனது மகனுக்காக கேட்கிறேன் எனக் கூறி திருவெறும்பூர் தொகுதியை எனக்கு பெற்றுத் தந்தார். இதை தொகுதி பங்கீட்டுக் குழுவில் அங்கம் வகித்த துரைமுருகன் என்னிடம் கூறியதைக் கேட்டதும், எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நாம் இன்னும் அதிகமாக கட்சிப் பணியாற்ற வேண்டும்”-என்றார்.

(அ)

# நடிகர் விஜயகாந்தின் உடல்நிலை மோசம்!

*சென்னை, நவ. 30*

தென்னிந்தியத் திரைப்பட நடிகரும் தே.மு.தி.க கட்சியின் தலைவருமான விஜயகாந்தின் உடல்நிலை மோசமடைந்து வருவதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடும் சுகவீனம் காரணமாக தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட விஜயகாந்த் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்தார்.

இது குறித்து தனியார் வைத்தியசாலை நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை இராமாபுரத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள விஜயகாந்தின் உடல்நிலை கடந்த 24 மணித்தியாலங்களில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# காங்கேசன்துறைப் பகுதியில் தொடர்கிறது இரும்பு திருட்டு!

யாழ்ப்பாணம், நவ. 30

**யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதியில் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான சிமெந்து தூண்களை உடைத்து அவற்றின் கம்பிகளைத் திருடர்கள் திருடிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.**



இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினர் மற்றும் காங்கேசன்துறை பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசமானது கடந்த காலங்களில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்துள்ள நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அப்பகுதியை விட்டு இராணுவத்தினர் வெளியேறியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மண்ணில் புதைக்கப்பட்டிருந்த 34 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு!



யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பானத்தில் சுமார் 34 கிலோ கிராம் கேரள கஞ்சாவை மண்ணுக்குள் புதைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 24 வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்து இக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 13 மில்லியன் ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## பல மாதங்களுக்கு பின்னர் நாட்டுக்கு திரும்பினார் சர்ச்சைக்குரிய போதகர் ஜெரோம் பெர்ணான்டோ

கொழும்பு, நவ. 30

போதகர் ஜெரோம் பெர்ணான்டோ நேற்று அதிகாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தடைந்தார் என குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர், கட்டார் எயார்லைன்ஸில் சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு திரும்பியதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் அவர் 48 மணித்தியாலங்களுக்குள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலம் வழங்க உள்ளார்.

ஜெரோம் பெர்ணான்டோ கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வரும் போது அவரை கைது செய்ய வேண்டாம் எனவும் அவர் இலங்கை வந்ததும், 48 மணி நேரத்திற்குள் அவரிடம் வாக்குமூலம் பெறுமாறும் சி.ஐ.டிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மத நல்லிணக்கத்துக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமைக்காக அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நாட்டை விட்டு வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாவனையாளர்களைப் பாதுகாக்க பண்டிகைக் காலத்தில் புதிய திட்டம்

கொழும்பு, நவ. 30

பண்டிகைக் காலத்தில் சந்தையில் பாவனையாளர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்னைகளைத் தவிர்ப்பதற்கும் அநீதியைத் தடுப்பதற்கும் விசேட வேலைத் திட்டம் ஒன்று இன்று முதல் ஜனவரி 15ஆம் திகதி வரை அமுல்படுத்தப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, அந்த காலப் பகுதியில், நுகர்வோர் அதிகார சபையின் அனைத்து புலனாய்வு அதிகாரிகளும் விசேட சோதனைகளை மேற்கொள்வார்கள். அதை விடுத்து நுகர்வோர் முறைப்பாடுகள் இருப்பின், நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 1977 என்ற குறுகிய தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்குமாறு அதிகாரசபை பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அனைத்து விசாரணை அதிகாரிகளும் சோதனைகள் மற்றும் விசாரணைகளை நடத்தவும், நுகர்வோர் அதிகமாக வாங்கும் ஆடைகள், நீடித்த பொருட்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை விற்கும் கடைகள் மீது அதிக கவனம் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மொபைல் விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை போன்ற நடவடிக்கைகள் நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரசபையின் விசேட மேற்பார்வைக்கு உட்படுத்தப்படும் என்றும், நாடு முழுவதும் உள்ள முக்கிய மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் கிடங்குகளில் சோதனைகளை அதிகார சபை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# யார் குற்றவாளி என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



கொழும்பு, நவ. 30

தரமற்ற மருந்து கொள்வனவு தொடர்பில் யார் குற்றவாளி என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும் என என சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சூழல் மற்றும் அபிவிருத்தியை எவ்வாறு சமநிலைப்படுத்துவது என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இரத்தினக்கற்கள் மற்றும் கனிய வளங்களைப் பொருளாதார ரீதியாக பயன்படுத்தப்படும் போது ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பிரச்சனைகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் முறையான ஆய்வு செய்யப்பட வேண்டும்.

இயற்கை சூழல் கட்டமைப்பைப் பாதுகாத்தல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பாக தற்போது உலகளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் பல உலகத் தலைவர்கள் இதில் ஆர்வமாக உள்ளனர்.

இதுவரை நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் மற்றும் உடன்படிக்கைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பதே ஜனாதிபதியின் பிரதான இலக்காகும்.

காலநிலை மாற்றம் தொடர்பான பல முக்கியமான முன்மொழிவுகள் குறித்து உலகத் தலைவர்களின் கவனத்தை ஈர்க்கவும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

மேலும், கடந்த காலங்களில் தரமற்ற மருந்துகள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன.

அதன்போது கிடைத்த முதலாவது முறைப்பாடின்போதே செயற்பட்டு குறித்த மருந்துக்கு அனுமதி பெறப்பட்ட விதம், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் ஊடாக ஆராயப்பட்டது.

போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை தெரியவந்தது.

இது தெரியவந்தவுடன் நான் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்தேன். அது தொடர்பாக தற்போது நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நான் செய்த முதலாவது முறைப்பாட்டைத் தொடர்ந்து பல்வேறு குழுக்கள் முறைப்பாடளிக்க ஆரம்பித்தன.

யார் குற்றவாளி என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும்-என்றார்.

(அ)

# மழை அதிகரிக்கும்

கொழும்பு, நவ. 30

நேற்று முதல் மழையுடனான வானிலை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அந்தமான் தீவுகளை அண்மித்த கடற்பிராந்தியத்தில் ஏற்பட்ட தாழமுக்கத்தினால் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு, மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றர் வரை பலத்த மழை பெய்யக்கூடும் என வானிலை அதிகாரி தர்மரட்ணம் பிரதீபன் தெரிவித்தார்.

காற்றழுத்த தாழ்வுநிலையினால் வங்காள விரிகுடாவின் ஆழ்கடல் பகுதிகளில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் போது அவதானமாக செயற்படுமாறு மீனவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(அ)

## துவாரகா வீடியோ விடயம் குறித்து மக்கள் அச்சப்படவேண்டியதில்லை!

கொழும்பு, நவ. 30

மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் மகள் எனக் கூறப்படும் பெண் ஒருவரின் காணொளியொன்று இணையத்தில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்விடயத்தைக் குறிப்பிட்டு நாட்டின் பாதுகாப்பு குறித்து வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் " தேசிய பாதுகாப்பு குறித்து மக்கள் அச்சப்பட தேவையில்லை எனவும் மீண்டும் இந்த நாட்டில் பயங்கரவாதம் இடம்பெறுவதை நாட்டு மக்கள் விரும்ப மாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் எனவும் அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

(அ)

# சிறுநீரக வர்த்தகம் கொழும்பில் தீவிரம்

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, நவ. 30

**கொழும்பு பிரதேசத்தில் உள்ள வறிய குடும்பங்களை இலக்கு வைத்து இடம்பெறும் சிறுநீரக வர்த்தகம் தொடர்பில் முறையான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவினர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளனர்.**

கொழும்பு 15, மட்டக்குளி பகுதியில் வசிக்கும் நால்வர் தாக்கல் செய்துள்ள முறைப்பாடு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுநீரகத்தை யார் யாருக்கு கொடுத்தார்கள், அதற்கான பணப் பரிவர்த்தனைகள் நடந்ததா? என்ற விடயம் தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை.

எவ்வாறாயினும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கருத்திற் கொண்டு முறையான விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர்.

கடந்த ஒரு வருட காலப்பகுதியில் கொழும்பு பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் இவ்வாறான சட்டவிரோத சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்கும் கொழும்பு குற்றவியல் விசாரணை பிரிவினர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வருடமும், கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் இடம்பெற்றதாக கூறப்படும் சிறுநீரக வர்த்தகம் குறித்த தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் குறித்த வைத்தியசாலையில் மீண்டும் அது தொடர்பான சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)




# மாற்றுத் திறனாளிகளுக்கு செஞ்சிலுவை சங்கம் உதவி

யாழ்ப்பாணம், நவ. 30

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கரவெட்டி கிளையின் ஏற்பாட்டில் கரவெட்டி பிரதேசத்துக்கு உட்பட்ட 27 மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கரவெட்டி பிரிவைச் சேர்ந்த ரகுபரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை செஞ்சிலுவை சங்கத் தலைவர் ம.பாலகிருஷ்ணன், கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன் ஆகியோர் கலந்துகொண்டு இவ் உதவிகளை மாற்று திறனாளிகளுக்கு வழங்கினர்.

நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கரவெட்டி பிரதேச நிர்வாகிகள், கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவை திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# நெதர்லாந்து வசமிருந்த இலங்கையின் 6 தொல்பொருட்கள் மீளக் கையளிப்பு



கொழும்பு, நவ. 30

150 வருடங்களுக்கு மேலாக நெதர்லாந்தின் வசமிருந்த இலங்கைக்கு சொந்தமான 6 தொல்பொருட்கள் நேற்று மீண்டும் கையளிக்கப்பட்டன.

நெதர்லாந்தில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட குறித்த தொல்பொருட்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டன.

நெதர்லாந்து தூதுவரினால் குறித்த பொருட்கள் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன. (அ)

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் 3ஆவது இயந்திரம் தேசிய கட்டமைப்புடன்

கொழும்பு, நவ. 30

பராமரிப்புப் பணிகளுக்காக செயலிழக்கச் செய்யப்பட்ட நுரைச்சோலை லக்விஜய அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின்னுற்பத்தி இயந்திரம் நேற்று தேசிய கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் 300 மெகாவாட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்படவுள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர், பொறியியலாளர் நொயெல் பிரியந்த குறிப் பிட்டார்.

இதனிடையே, தொழிநுட்பக் கோளாறு காரணமாக செயலிழக்கச் செய்யப்பட்ட நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் இரண்டாவது மின்னுற்பத்தி இயந்திரத்தை, எதிர்வரும் 16 ஆம் திகதியளவில் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மழையுடனான வானிலையினால் நாளாந்த மின்னுற்பத்தியில் 65 வீதம் நீர்மின்சாரத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், கடந்த சில நாட்களிலேயே அதிகளவிலான நீர்மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தமது அதிகாரசபைக்கு உட்பட்ட நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மொத்த கொள்ளளவின் 88 வீதம் வரை உயர்வடைந்துள்ளதாக இலங்கை மகாவலி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

நீர்மின் உற்பத்திக்காக அதிகளவிலான நீர் தற்போது விடுவிக்கப்படுவதாக அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ)

# மன்னாரில் கஞ்சாவுடன் குடும்பப் பெண் கைது!



மன்னார், நவ. 30

மன்னார் பேசாலை பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ் பிரிவு, குற்றப் புலனாய்வு பிரிவினருடன் இணைந்து சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.

இதன்போது மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள ஒரு வீட்டை சோதனையிட்டபோது ஒரு கிலோ 30 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒரு குடும்பப் பெண் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் நீண்ட காலமாக கஞ்சா கடத்தலை மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் மேலதிக விசாரணைகளுக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# மாவீரர் தின நினைவேந்தலில் ஈடுபட்ட 7 பேரை தடுத்து வைத்து விசாரணை!

மட்டக்களப்பு, நவ. 30

மாவீரர் நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் வவுணதீவு மற்றும் வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 7 பேரும் 72 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தின நினைவேந்தலை முன்னிட்டு மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலுமில்லத்தை அலங்கரித்த கொடிகள், கம்பங்கள் உள்ளிட்டவற்றை கொண்டு சென்ற நான்கு பேர் தரவை பகுதியில் வைத்து வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன்பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக விளக்கேற்றிய இருவர் உட்பட மூன்று பேரை வவுணதீவு பொலிஸார் கைது செய்தனர்.

இந்த நிலையில் குறித்த 7 பேரும் 72 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# ரயில்வே திணைக்கள மறுசீரமைப்புத் திட்டம் இடைக்கால அறிக்கை ஜனாதிபதி செயலரிடம்

கொழும்பு, நவ. 30

ரயில்வே திணைக்களத்தை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் உள்ளடங்கிய இடைக்கால அறிக்கை ஜனாதிபதியின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, அது தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் அடிப்படை திட்டங்கள் தொடர்பில் குறித்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக குழுவின் தலைவரும் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன்சந்ர குறிப்பிட்டார்.

ரயில் சேவையை வினைத்திறனுடையதாக மாற்றுதல் மற்றும் நட்டத்தை குறைத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பான யோசனைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ரயில் சேவையை மறுசீரமைப்பது தொடர்பில் யோசனைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவில், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உள்ளிட்ட 16 பேரும் முன்னாள் ரயில்வே பொதுமுகாமையாளரும் நியமிக்கப்பட்டனர்.

இந்த குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக கையளிக்கப்படவுள்ளது. (அ)

# ஆறு மாதங்களுக்குள் ஆட்டம் முடிந்துவிடும்!

## பிரேமதாச அரசு அமைக்கப்படும் என்கிறார் எஸ்.எம்.மரிக்கார் எம்.பி.

**கொழும்பு, நவ. 30**

**கொழும்பில் 50 ஆயிரம் வீடுகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்கப்படும் எனும் ஜனாதிபதியின் உறுதிமொழியானது உண்மைக்குப் புறம்பானது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.**

**பாராளுமன்ற அமர்வு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் காலை 9.30 இற்கு ஆரம்பமானது.**



தொடர்ந்து வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்றுவரும் நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அத்துடன், கொழும்பில் 14, 512 வீடுகள் மாத்திரமே உறுதிப் பத்திரம் வழங்கும் நிலையில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், பெரும்பாலான வீடுகளுக்கு முதல் உரிமையாளர் அற்ற நிலை காணப்படுவதாகவும், சில வீடுகளில் இரண்டாம் உரிமையாளர் வசிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்து கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார்-

கொழும்பு வாழ் மக்களுக்கு வீட்டு உறுதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடமைப்பட்டவர். இந்த மக்களுக்கு வீட்டு உறுதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுத்து தொடர்பில் 2017 ஆம் ஆண்டு முதல் கோரிக்கை விடுத்து வருகின்றேன். இப்போதாவது அவருக்கு அவ்வாறானதொரு யோசனை தோன்றியதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால் இது பிரயோசனமற்ற யோசனை. இந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் 11 பில்லியன் அளவிலான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த தொகையானது முன்மொழிவு மாத்திரமே. இந்த தொகை முழுமையாக கிடைப்பதற்கு சாத்தியமில்லை. ஒரு நாடு எந்தளவு முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதனை அந்த நாட்டில் உள்ள கட்டிடங்கள் பிரதிபலிக்கின்றன. ஆகவே இந்த வரவு - செலவுத் திட்டத்தில் சாகல உள்ளிட்டோர் கொழும்பிற்குள் பிரவேசிப்பது குறித்து மாத்திரமே சிந்திக்கப்பட்டுள்ளது. கொழும்பிற்கு வெளியில் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு எவ்வாறு வீடுகளை அமைப்பது என்பது தொடர்பில் எந்தவொரு முன்மொழிவும் காணப்படவில்லை.

ஆகவே, சாகல ரத்நாயக்க அல்லது ரவி கருணாநாயக்க ஆகியோரை எம்மோடு தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுமாறு கோருகின்றேன். கொழும்பில் அனைத்து வசதிகள் இருக்கின்ற போதும் கொழும்பு வாழ் மக்கள் அதனை அனுபவிப்பதற்கான பலத்தினை கொண்டிருக்கவில்லை. பௌத்தர்கள் எனக் கூறியவர்களினாலே இந்த நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டது. ஆகவே, எதிர்வரும் 6 மாதங்களுக்கு மாத்திரமே இவ்வாறு ஆட முடியும். அதற்குப் பின்னர் பிரேமதாச அரசாங்கமே ஆட்சியமைக்கும் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்-என்றார்.

# படைப்புழுவின் தாக்கத்தினால் சோளப் பயிர்ச்செய்கை பாதிப்பு!

கொழும்பு, நவ. 30

இந்த முறை பெரும்போகத்தில் படைப்புழுவின் தாக்கத்தினால் சோளப் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை, மொனராகலை, அம்பாறை, அநுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இந்த ஆண்டு சிறிய அளவிலான விவசாயப் பங்களிப்பு திட்டங்களின் கீழ் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், படைப்புழுக்களால் ஏற்படும் சேதங்களை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு உடனடியாக தெளிவுபடுத்துமாறு அமைச்சர் மகிந்த அமரவீர விவசாய திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

(அ)

# போதைப் பொருள் வர்த்தகர்கள் 11 பேர் கொழும்பில் வைத்து கைது!

கொழும்பு, நவ. 30

போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய 11 பேர் நான்கு வாள்களுடன் கொழும்பு குற்றவியல் விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது அவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதானவர்களில் மூன்று பெண்களும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

23 முதல் 35 வயதுக்கு இடைப்பட்ட 8 ஆண்களும் 26, 46 மற்றும் 47 வயதுடைய மூன்று பெண்களுமே இவ்வாறு கைதாகியுள்ளனர். (அ)

# ‘போலிக்’ அமிலம் தட்டுப்பாடில்லை

கொழும்பு, நவ. 30

கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் போலிக் அமிலம் என்ற மருந்துக்கு இதுவரையில் தட்டுப்பாடு பதிவாகவில்லை என அரச குடும்பநல சுகாதார சேவையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.


இந்த விடயம் தொடர்பில் பல மாவட்டங்களில் ஆராயப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவி தேவிக்கா கொடித்துவக்கு தெரிவித்தார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் போலிக் அமிலம் உள்ளிட்ட விற்றமின் வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கடந்த தினங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், சகல மருந்தகங்களிலும் போலிக் அமிலம் என்ற மருந்து போதிய அளவில் கையிருப்பில் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரச குடும்பநல சுகாதார சேவையாளர்கள் சங்கத்தின் தலைவி தேவிக்கா கொடித்துவக்கு கூறினார். (அ)

# பொலிஸாரின் செயல்பாடுகளை கண்டு மௌனம் காக்கிறார் ஜனாதிபதி ரணில்!

## சாணக்கியன் எம்.பி. கண்டனம்



மட்டக்களப்பு, நவ. 30

நல்லிணக்கம் பேசும் ஜனாதிபதி, நல்லிணக்கத்திற்கு மாறாக இறந்தவர்களை நினைவு கூருவோரை கைது செய்யும் பொலிஸாரின் செயற்பாடுகளை அவர் கண்டு மௌனமாக இருப்பாரானால் அவரின் செயற்பாடுகளை அவர் ஏற்றுக் கொள்கின்றார் என்றே பார்க்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகரை சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் அண்மையில் தரவை துயிலும் இல்லத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் குறித்து அவருடன் கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

மாவீரர் துயிலும் இல்லம் என்ற பதாகை வைக்கப்பட்டதன் காரணமாக மாவீரர் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு உறுப்பினர் உட்பட நான்கு பேரை கைதுசெய்து அவர்கள் மீது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் பொலிஸார் வழக்கு தொடுத்துள்ளனர்.

குறித்த நபர்கள் கைதுசெய்யப்பட்டு இரண்டு தினங்களை கடந்துள்ள நிலையில், இதுவரை அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தாமை குறித்து கேள்வியெழுப்பியபோதிலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளதன் காரணமாக அவர்களை மூன்று தினங்கள் வைத்து விசாரணை செய்த பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தமுடியும் என பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தமாட்டோம் என்று சர்வதேசத்திற்கு கூறிவிட்டு இங்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேபோன்று வவுணதீவு பிரதேசத்தில் பிறந்த நாளுக்கு கேக் வெட்டியவர்களையும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்த நாட்டில் இவ்வாறான செயற்பாடுகள் ஒருபோதும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தாது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அவர் இது தொடர்பான நடவடிக்கையெடுக்காவிட்டால் அவர் நல்லிணக்கம் பேசும் ஜனாதிபதி நல்லிணக்கத்திற்கு மாறாக இறந்தவர்களை நினைவு கூருவோரை கைதுசெய்யும் பொலிஸாரின் செயற்பாடுகளை கண்டு மௌனமாக இருப்பாரானால் அவரின் செயற்பாடுகளை அவர் ஏற்றுக் கொள்கின்றார் என்றே பார்க்க வேண்டும்.

இராணுவத்துடன் இணைந்து கடந்த காலத்தில் தமிழ் மக்களை கொலை செய்தவர்கள் வெருகல் பகுதியில் சிவப்பு, மஞ்சள் கொடிகளை கட்டி நிகழ்வுகளை செய்யும் போது அவர்களுக்கு எந்த தடையும் விதிக்கப்படுவதில்லை.

எதிர்வரும் காலங்களில் ஆலயங்களில் கூட சிவப்பு, மஞ்சள் கொடிகளைக்கட்டி நிகழ்வுகளை செய்யும்போது அதுவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றமாக சொல்வார்களா என்பது தெரியாது-என்றார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகம் பெண்களாலேயே ஏற்படுத்தப்படுகின்றன!

## அம்பாறை பெண்கள் அமைப்பின் தலைவி

அம்பாறை, நவ. 30

**"இந்த நாட்டில் பெண்களுக்கெதிரான அதிகளவிலான வன்முறைகள் ஆண்களை விட பெண்களாலேயே ஏற்படுகின்றன."**

**-இவ்வாறு மத்திய முகாம் பிரதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வைபவமொன்றில் கலந்து கொண்ட அம்பாறை பெண்கள் அமைப்பின் தலைவி திருமதி லீலாவதி சோமரெட்ண தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**



பெண்கள் தனது சொந்த காலில் நின்று பொருளாதார ரீதியில் மேம்படும் போது எந்த வொரு சக்திக்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை.

இன்று எமது சமூகத்தில் பெண்களுக்கெதிரான வன்முறையினை முற்றாக ஒழிக்கா விட்டாலும், ஓரளவிற்கேனும் இல்லாதொழிப்பதற்கு அனைவரினதும் பங்களிப்பு அவசியமாகின்றது. வன்முறை என்பது அதிகாரம் அதிகமுள்ளவர்கள் அதிகாரம் குறைந்தவர்கள் மீது பிரயோகிக்கும் ஒருவகை சக்தியாகும்.இது பல்வேறு வகைகளிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறுபட்ட நபர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.அதே வேளை சட்டத்திலுள்ள ஓட்டை காரணமாக குற்றசாளிகள் தப்பித்தும் கொள்கின்றார்கள்.

வீட்டின் வன்முறையின் போதும் சரி ஏனைய மூலகங்கள் ஊடாக இடம்பெறும் வன்முறையின் போதும் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் பெண்களாகவும் சிறுவர்களாகவும் உள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் 30 சதவீதமாக பெண்கள் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டு வருவதாக அண்மைக் கால அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதே போன்று அதிகமான வன்முறைகள் இடம்பெறும் இடமாக வீடுதான் அமைந்துள்ளது.இதற்கு பெற்றோர்களும் ஒரு காரணமாக அமைகின்றனர்.

ஒரு பிள்ளை தாயின் கருவில் உருவாகும் போதே வன்முறை ஆரம்பமாகின்றது.முன்பெல்லாம் ஒரு தாய்க்கும் தகப்பனுக்கும் பிள்ளை பிறந்த பின்னர் தான் அது ஆணா பெண்ணா என்பது தெரியவரும். அந்த செய்தியினை அறிவதற்கு குடும்பத்தினர் பெரும் ஆவலாக இருப்பார்கள். இன்று அந்த நிலமை மாறி கருவுற்ற மறுகணமே அது ஆணா பெண்ணா என்பது தெரிய வந்து விடுகின்றது. இதனால் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வன்முறை உருவாவதற்கு வித்திடப்படுகின்றது. கருவுற்றிருப்பது பெண் என்று தெரிந்தும், அதிகமான தந்தைமார் சீதனக் கொடுமை காரணமாக அதனை கருவிலேயே அழிக்க முற்படுகின்றார்கள். இன்று இலங்கையின் சனத்தொகையில் ஆண்களை விட பெண்களின் தொகை அதிகரித்துக்கொண்டு செல்லும் அதே வேளை கல்வியறிவியலிலும் உயர் தொழில் துறைகளிலும் பெண்களே முன்னேறி வருகின்றனர்.ஆனால் சமூகத்தின் எந்த நிலையிலும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களாகவே இருக்கின்றனர். இந்த நிலமை மாற வேண்டும் என்பது பற்றி பிள்ளையின் பெற்றோர் கவலை கொள்வதில்லை. பெண்களுக்கெதிரான வன்முறை இந்த நாட்டில் இல்லாதொழிக்கப்பட வேண்டும். பெண்களின் உரிமை மதிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# திஹாறிய தாருஸ்ஸலாம் பாடசாலை சிறுவர் சந்தை

அம்பாறை, நவ. 30

திஹாறிய தாருஸ்ஸலாம் ஆரம்ப பாடசாலையின் தரம் 03 மாணவர்களின் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளின் ஒன்றான மாணவர் சிறுவர் சந்தை பாடசாலை அதிபர் எம்.எப்.எம்.சபீர் அவர்களின் வழி காட்டலில்,ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்புடன் நேற்று நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தமது கணித அறிவையும், சமூகத்தில் தொடர்பாடல் விருத்தி, வியாபார நுனுக்கங்கள், என்பவற்றை பாடசாலையிலேயே கற்றுக் கொடுக்கும் பயிற்சியாக குறித்த பாடசாலை மாதிரி சந்தை நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த சந்தையில் மாணவர்கள் தமது வீட்டுத்தோட்டத்தில் விழைந்த காய்கறிகள், தேங்காய், கீரை வகைகள், பழங்கள், கைப்பணிப் பொருட்கள், உணவு பொருட்கள்,கற்பித்தல் உபகரணங்கள் போன்றவற்றை காட்சிப்படுத்தி வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் தமது விற்பனைப் பொருட்களை வியாபாரம் செய்த அதே வேளை பெற்றோரும், பாடசாலை மாணவர்களும் சிறுவர்களிடம் பணம் கொடுத்து பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.

குறித்த மாதிரி சந்தை இணைப்பாடவிதான இச் செயற்பாடுகள் மாணவர்களின் தனி ஆளுமை விருத்தியை வெளிக்கொண்டு வரும் வகையில் காணக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)







# வருமானம் குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

அம்பாறை, நவ. 30

திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட விநாயகபுரம் மண்டானை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அதிபர் டினேஸ்ராஜன் தலைமையில் இடம்பெற்றது.

சுவிஸ் உதயம் அமைப்பின் செயலாளர் அம்பலவாணர் ராஜனின் பிறந்த தினத்தை யொட்டி மாணவர்களுக்கு இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது சுவிஸ் உதயம் அமைப்பின் பொருளாளர் க. துரைநாயகம்,செயலாளர் அம்பலவாணர் ராஜன், உப பொருளாளர் பேரின்பராஜா, சுவிஸ் உதயத்தின் கிழக்கு மாகாண அமைப்பின் செயலாளர் ரொமிலா செங்கமலன், பொருளாளர் அக்கரை பாக்கியன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சுமார் 50மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. அத்துடன் உப பொருளாளர் பேரின்பராஜாவின் சொந்த நிதியில் குறித்த பாடசாலையின் தேவைகளை நிவர்த்திசெய்யும் வகையில் ஒரு தொகை நிதியும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச பங்களிப்புடன் புனரமைப்பு செய்யப்பட்ட வீடுகள் கையளிப்பு

காரைதீவு, நவ. 30

காரைதீவு பிரதேச செயலகப் பிரிவின் மாவடிப்பள்ளி மேற்கு பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2023 ம் ஆண்டிற்காக நடைமுறைப்படுத்தும் 250,000 பெறுமதியான அரச பங்களிப்புடன் புணர்நிர்மானம் செய்யப்பட்ட வீடு திறந்து வைத்து பயனாளியிடத்தில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ் கலந்து கொண்டதுடன், மேலும் விசேட அதிதியாக காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன் அவர்களும் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், மாவடிப்பள்ளி பள்ளிவாசல் தலைவர் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.



# சம்மாந்துறை பிரதேச கலை இலக்கிய விழா!

அம்பாறை, நவ. 30

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் அனுசரணையில் "பிரதேச கலை இலக்கிய விழா - 2023" சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திரு. நவநீதன், மேலதிக மாவட்ட செயலாளர் வீ.ஜெகதீசன் ஆகியோரும் இலக்கிய அதிதியாக எழுத்தாளரும் வைத்தியருமான எம்.எம். நௌசாட் மற்றும் பிரதேச செயலக உயர் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





கலை கலாசார நிகழ்வுகள், போட்டி நிகழ்ச்சிகளுக்கான பரிசில்கள் வழங்கல் மற்றும் கலைஞர் கௌரவிப்பு என பல நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோப்-28 காலநிலை மாநாட்டுக்கான பயணத்தை ரத்து செய்தார் பாப்பரசர்

**ரோம், நவ. 30**

**டுபாயில் நடைபெறும் கோப்-28 காலநிலை மாநாட்டிற்கான தனது பயணத்தை பாப்பரசர் பிரான்சிஸ் இரத்து செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



அவர் காய்ச்சல் மற்றும் நிமோனியாவால் பாதிக்கப்பட்டிருந்ததால் இவ்வாறு டுபாய்க்கான பயணத்தை ரத்து செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், 86 வயதான போப் பிரான்சிஸ், எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள் பயணத்தை தொடங்க திட்டமிட்டிருந்தார்.

கடந்த வார இறுதியில் போப் உடல்நலக்குறைவு இருந்தபோதிலும் திட்டமிட்டபடி துபாய் பயணத்தில் கலந்து கொள்வார் என்று வத்திக்கான் முன்பு கூறியிருந்தது.

“இந்த பயணத்திற்கு செல்ல வேண்டாம்“ என அவரது மருத்துவர்கள் வற்புறுத்தியதை அடுத்து, போப் மிகுந்த வருத்தத்துடன் பயணத்தை இரத்து செய்ய ஒப்புக்கொண்டதாக வத்திக்கான் கூறுகிறது.

பாப்பரசர் பிரான்சிஸுக்கு இந்த ஆண்டு சில உடல்நலப் பிரச்சினைகள் முன்னதாக இருந்தன.

மார்ச் மாதத்தில் மூச்சுக்குழாய் அழற்சியால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் மற்றும் ஜூன் மாதம் குடலிறக்கத்திற்காக வயிற்று அறுவைச் சிகிச்சை செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உத்தரகாண்ட் சுரங்கப்பாதையில் சிக்கிய 41 பணியாளர்களும் பாதுகாப்பாக மீட்பு!

*புதுடில்லி, நவ. 30*

இந்தியாவின் உத்தரகாண்டின் சுரங்கப்பாதையில் சிக்கியிருந்த 41 பணியாளர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்களை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட குழாயின் ஊடாக அவர்கள் அனைவரும் வெளியே வந்தனர்.

மீட்கப்பட்டவர்கள் வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

இதன் பொருட்டு தயாராக காத்திருந்த நோயாளர் காவு வாகனங்களின் மூலமாக அவர்கள் உடனடியாக வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (அ)



# இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தம் மேலும் நீடிக்கப்படுவது அவசியம்

## வெள்ளை மாளிகை வலியுறுத்து

*வொஷிங்டன், நவ. 30*

இஸ்ரேல்-ஹமாஸ் போர் இடைநிறுத்தத்தை நீடிக்க அமெரிக்கா ஆதரிக்கிறது என அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்கள் வசிக்கும் காஸா பகுதியை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு இடையே கடந்த மாதம், 7ஆம் திகதியில் இருந்து போர் நடந்து வந்தது.

பின்னர் இரு தரப்புக்கும் இடையே நடந்த பேச்சில், நான்கு நாட்கள் போர் நிறுத்தம் செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது. அமெரிக்கத் தலையீடு, கத்தார், எகிப்து மத்தியஸ்தத்தின் விளைவாக இந்தப் போர் நிறுத்தம் மேலும் இரண்டு நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, அமெரிக்கா வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி கூறியதாவது, பிணைக் கைதிகள் அனைவரையும் விடுவிக்க விரும்புகிறோம். எனவே, போர் இடைநிறுத்தத்தை நீடிக்க அமெரிக்கா ஆதரிக்கிறது.




நான் கூறியது போல், பிராந்தியத்தில் உள்ள அனைத்து அதிகாரிகளிடமும் ஆலோசனை நடத்த உள்ளோம். ஹமாஸுக்கு எதிராகத் தங்களைத் தற்காத்துக் கொள்ளத் தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கி வருவது இஸ்ரேலுக்குத் தெரியும் என கூறினார். (அ)

# அவுஸ்திரேலியாவில் வெள்ள அபாய நிலை

*மெல்பேர்ண், நவ. 30*

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் அதி தீவிர வானிலை முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் தெற்கு கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் காலை 9 மணி முதல் 339 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது.

இதன் காரணமாக நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் பல நகரங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளம் இதுவாகுமென சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



இந்த நிலையில் பாதுகாப்பாக செயற்படுமாறு மக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே, மாநிலத்தின் தென்மேற்கில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 20 இற்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவசர சேவைகள் குறிப்பிடுகின்றன.

இந்த நிலையில், கடந்த 24 மணிநேரத்தில் 70 இருக்கும் மேற்பட்ட உதவிக்கோரிக்கைகளுக்கும் மாநில அவசர சேவை பதிலளித்துள்ளது.

இருப்பினும், மேலதிக உதவி தேவைப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# போர்நிறுத்தத்தின் 5ஆம் நாளில் 30 பலஸ்தீனியர்கள் விடுவிப்பு!

*ஜெருசலேம், நவ. 30*

போர்நிறுத்த ஒப்பந்தம் 2 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்ட நிலையில் 5 ஆவது நாளான நேற்று முன்தினம் 30 பலஸ்தீனிய கைதிகள் இஸ்ரேல் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட கைதிகளில் 15 பேர் பெண்கள் மற்றும் 15 பேர் சிறுவர் சிறுமிகள் அடங்குவதாக கட்டார் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் காசாவில் இருந்து 12 பணய கைதிகள் விடுவிக்கப்பட்டனர் என்றும் அவர்களில் 2 பேர் வெளிநாட்டவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுவரை காசாவில் இருந்து 60 பெண்கள் மற்றும் குழந்தைகள் என 80-க்கும் மேற்பட்டோரும் இஸ்ரேலில் உள்ள சிறைகளில் இருந்து 180-க்கும் மேற்பட்டோரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



அனைத்து பணய கைதிகளையும் விடுவித்தாலும் ஹமாஸ் அமைப்பை அழிப்பதோடு இஸ்ரேல் மக்களுக்கு காசா அச்சுறுத்தலாக இருக்காது என்பதை உறுதி செய்வோம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறியுள்ளார். (அ)

# வடக்கு காசாவுக்கு செல்ல வேண்டாம்!

## இஸ்ரேலியப் படைகள் எச்சரிக்கை

*டெல் அவிவ். நவ. 30*

போர் வலையமாக அறிவிக்கப்பட்டுள்ள பாலஸ்தீனியர்களை வடக்கு காசாவிற்குச் செல்ல வேண்டாம் என இஸ்ரேலியப் படைகள் எச்சரித்துள்ளன.

எல்லையில் இருந்து ஒரு கிலோமீட்டருக்குள் செல்லவும் கடலுக்குள் நுழையவும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலியப் படைகள் அறிவித்துள்ளன. (அ)



# சீனாவை பாதித்த சுவாச நோய் இலங்கையிலும் பரவி வருகிறது

## பேராசிரியர் ஜீவாந்த எச்சரிக்கை

கொழும்பு, நவ. 30

**நாடு முழுவதும் பதிவாகும் சளி, காய்ச்சல் உள்ளிட்ட சுவாச அமைப்பு தொடர்பான நோய்களானது பல வைரஸ்களின் கலவையாக இருக்கலாம் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் உயிரணு உயிரியல் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி பேராசிரியர் சந்தன ஜீவாந்த தெரிவித்தார்.**

“இது சீனாவில் இருந்து பதிவாகும் சளியின் கலவையாகும்.

சீனாவில் பரவிவரும் நிமோனியா நிலைமை நாட்டிலும் பரவுமானால், அதனைக் கண்டறியும் ஆய்வகங்கள் நாட்டில் உள்ளன. வைரஸ் தொடர்பில் இதுவரையில் குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் இல்லை.” எனவும் சந்தன ஜீவந்த கூறினார்.

சீனாவில் பீஜிங், லியோனிங் உள்ளிட்ட மற்றும் பல நகரங்களில் உள்ள குழந்தைகள் வைத்தியசாலைகள் இந்த நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளால் நிரம்பியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதனையடுத்து, வட சீனாவில் பரவி வரும் நோய் பற்றிய அனைத்து தகவல்களையும் வழங்குமாறு உலக சுகாதார நிறுவனம் சீனாவிற்கு அறிவித்திருந்தது.

அதிகரித்து வரும் சுவாச பாதிப்புகளுக்குப் பின்னால் புதிய வைரஸ் இல்லை என சீன சுகாதாரத்துறை அதிகாரபூர்வமாக விளக்கமளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வங்குரோத்து நிலை டிசெம்பரில் மாறும்!

கொழும்பு, நவ. 30

“இலங்கையை எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுப்பார்.” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு வங்குரோத்து நிலையில் இருக்கும்போதே வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், டிசம்பர் மாதமளவில் வங்குரோத்து நிலையை நீக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார். அதன் பின்னர் அடுத்தக்கட்ட நகர்வுகள் முன்னெடுக்கப்படும். குறிப்பாக அரச நிர்வாக பொறிமுறை பலப்படுத்தப்படும்.

ரணில் விக்கிரமசிங்கவின் வாக்கு வங்கி பற்றி இங்கு கதைத்தனர். இலங்கையில் முதலாவது பிரதமரை அனைத்து கட்சிகளும் இணைந்துதான் உருவாக்கின. அன்று ஒற்றுமை இருந்தது. 1956 பொதுத்தேர்தலில் ரூவான்வெல்ல தொகுதியில் ரணசிங்க பிரேமதாச தோல்வி அடைந்தார். அதன்பின்னர் கொழும்பு வந்தார். தோல்வி அடைந்தாலும் நாட்டுக்காக முன்னிலையாகும் ஆளுமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கின்றது-என்றார். (அ)

# இறப்பர் ஆலையில் தீ பரவல்!

கொழும்பு, நவ. 30

இறப்பர் உற்பத்தி தொழிற்சாலையில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டது.

தங்கொவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொரகஸ் மங்கட அல்கம வீதியில் அமைந்துள்ள இறப்பர் உற்பத்தி தொழிற்சாலையில் இவ்வாறு தீ பரவல் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து நேர்ந்துள்ளதாக தங்கொவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலுக்கமைய உடனடியாக நடவடிக்கை எடுத்த பொலிஸார் இரவு நேரங்களில் பணிபுரியும் தொழிலாளர்களை பாதுகாப்பாக வெளியேற்றினர்.

அத்துடன், கம்பஹா தீயணைப்பு பிரிவினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், தங்கொவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மாவீரர் நினைவேந்தலுக்கு சிறுவரை ஈடுபடுத்தியமை குறித்து விசாரணை!

யாழ்ப்பாணம், நவ. 30

தமிழீழ விடுதலைப் புலிகள் போன்று ஆடை அணிந்து சயனைட் போன்றவற்றை கழுத்தில் அணிவித்து நினைவேந்தலில் ஈடுபட 3 சிறுவர்களை பாவித்தமை தொடர்பில் யாழ்.மாவட்டத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் வீசாந்தவின் உத்தரவின் பேரில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போரில் உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர்களை நினைவு கூரும் வகையில் கோப்பாயில் உள்ள துயிலும் இல்லத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வுக்காக இந்த மூன்று சிறுவர்களும் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று சிறுவர்களின் பெற்றோர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# ரொஷான் ரணசிங்கவின் பதவி நீக்கம் அமைச்சர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 30

என்ன நடந்தாலும் பரவாயில்லை, ஆமாம் சாமி கூறி அமைச்சு பதவிகளை தக்கவைத்துக்கொள்ளுங்கள். அவ்வாறு இல்லாவிட்டால் பதவி நீக்கப்படுவீர்கள் என்ற சிவப்பு எச்சரிக்கையையே ரொஷான் ரணசிங்க ஊடாக அமைச்சர்களுக்கு ஜனாதிபதி விடுத்துள்ளார் - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்ட சஜித் இது தொடர்பில் கூறியவை வருமாறு:

கிரிக்கெட் சபைக்கு எதிரான தீர்மானத்துக்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினார்கள். இந்த தீர்மானத்துக்கு முரணாக அமைச்சரவை பதவி நீக்கிவிட்டு, ஊழல் செய்த குழு பாதுகாக்கப்பட்டுள்ளது.

கொள்ளை இடம்பெற்றாலும் பரவாயில்லை, ஆனால் திருடர்களைப் பிடிக்க வேண்டாம் எனவும், ஆமாம் சாமி போட்டு பதவிகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்றும், இல்லையேல் ரொஷான் ரணசிங்கவிற்கு நடந்தது போன்று நடக்கலாம் என்ற சிவப்பு எச்சரிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தலைமையிலான அரசுக்கு விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்ட போதும் ஜனாதிபதி தவறான வழியில் செயற்பட்டார், பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி, இறுதியாக பாராளுமன்ற அதிகாரத்தை கிடப்பில் போட்டுள்ளார். தேர்தலை நடத்துவது தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பைக்கூட அவர் புறக்கணித்துள்ளார்.

சீனி, மருந்து, கிரிக்கெட் போன்ற மாபியாக்களினால் அமைச்சர்களை பதவி நீக்கம் செய்வது தொடர்பில் கூட தீர்மானங்கள் எடுக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் ஆணை கிடைக்காத ஜனாதிபதியால், மக்கள் வாக்கு மூலம் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்-என்றார். (அ)

# 6 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இலவச வீஸா வழங்கும் திட்டம்!

கொழும்பு, நவ. 30

ஆறு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இலவச விசா வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி சீனா, இந்தியா, ரஷ்யா, இந்தோனேஷியா, தாய்லாந்து, மலேசியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு இலவச விசா வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா கைத்தொழிலை கட்டியெழுப்பும் முன்னோடி நிகழ்ச்சித் திட்டமாக, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அடுத்த வருடம் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி இராஜதந்திர, உத்தியோகபூர்வ, பொது அலுவல்கள் மற்றும் ஆரம்ப கடவுச்சீட்டுக்களை வைத்திருக்கும் குறித்த நாடுகளின் பிரஜைகள் இந்தத் திட்டத்தின் கீழ் கட்டணம் இன்றி இலவசமாக விசாவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அடுத்த வருடம் மார்ச் மாதம் 31 திகதி வரை சீனா, இந்தியா, ரஷ்யா, இந்தோனேஷியா, தாய்லாந்து, மலேசியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரஜைகள் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் கட்டாயமாக இலத்திரனியல் பயண அனுமதிக்காக விண்ணப்பித்து அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் சுற்றுலாப் பயணிகள் 30 நாட்கள் கட்டணம் இன்றிய இலவச விசா காலத்தை அனுபவிக்க முடியும்.

அத்துடன், இலங்கைக்கு வருகைத்தந்த முதல் நாளில் இருந்து 30 நாட்களுக்குள் இருமுறை நுழைவு வசதிகள் வழங்கப்படுகின்றன.

அத்துடன், இந்தத் திட்டத்தின் கீழ் இலவச இலத்திரனியல் பயண அனுமதிக்கு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியுமென குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# சுற்றுலா பயணிகளை ஏற்றிச் சென்ற சொகுசு பஸ் ரயிலுடன் மோதி விபத்து!

கொழும்பு, நவ. 30

களுத்துறை-வஸ்கடுவ பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையை கடக்கும்போது சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற சொகுசு பஸ் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த பஸ் ஒரு ஹோட்டலில் இருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு மற்றொரு ஹோட்டலுக்கு செல்லும்போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸில் பயணித்த சுற்றுலாப் பயணிகள் செக் குடியரசை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று இரவு 9 மணிக்கு நாட்டை விட்டுச் செல்ல வேண்டியிருந்த நிலையிலேயே, அளுத்கமவில் இருந்து சிலாபம் நோக்கி பயணித்த ரயிலுடன் இவர்கள் பயணித்த பஸ் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் பஸ்ஸின் சாரதிக்கும் இரண்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

விபத்து காரணமாக அளுத்கமையிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் ரயில் மாத்திரம் இரத்து செய்யப்பட்டிருந்தது.

விபத்தில் சிக்கிய ரயிலில் இருந்த பயணிகள், மருதானை நோக்கிச் செல்லும் மற்றொரு ரயிலில் சென்று தாங்கள் செல்ல வேண்டிய இடத்தை அடைந்துள்ளனர். இந்த விபத்து தொடர்பாக வஸ்கடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொக்குத்தொடு...

என்று முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர், சடலங்களை அகழ்ந்து எடுக்கும் பணிக்கு பொறுப்பான முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

புதைகுழியானது கொக்கிளாய் - முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் 1.7 மீற்றர் நீளத்துக்கு நெடுஞ்சாலையை நோக்கி விரிவடைந்துள்ளமை ஸ்கான் பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளது. இது தொடர்பிலேயே நேற்று கலந்துரையாடப்பட்டது.

இந்தப் புதைகுழி முற்றுமுழுதாக ஆராயப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே அனைவரும் உள்ளனர். எனவே, அடுத்த வருடம் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு அகழ்வு பணிகள் இடம்பெறவுள்ளன.

இந்த அகழ்வு பணிகளை இலகுபடுத்தவும் ஒழுங்குபடுத்தவும் ஓர் அதிகாரி நியமிக்கப்படவுள்ளார். இதற்கான உத்தரவை நீதிபதி அரசாங்க அதிபருக்கு வழங்கியுள்ளார். பகுப்பாய்வு டிசெம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் சட்ட மருத்துவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதனிடையே, இரண்டாவது கட்டமாக 9ஆவது நாளாக நேற்று தொடர்ந்த அகழ்வு பணிகள் நேற்றுடன் நிறுத்தப்பட்டன. நேற்றுவரை புதைகுழியில் 40 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பான வழக்கு விசாரணை ஒன்று எதிர்வரும் டிசெம்பர் 14ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றில் நடைபெறவுள்ளது. மேலும் அகழ்வுப் பணி மூன்று மீற்றர் அகலம், 14 மீற்றர் நீளம், 1.5 மீற்றர் ஆழத்துக்கு அகழப்பட வேண்டியிருக்கும் என்று கூறப்படுகின்றது.

இந்தப் புதைகுழி தொடர்பில் இதுவரை அறிக்கை எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்நிலையில், டிசெம்பர் 31 ஆம் திகதி முதல் அறிக்கையை பேராசிரியர் ராஜ் சோமதேவ சமர்ப்பிக்கவுள்ளார். (அ-ஐ-10)

## தண்டனை...

30ஆம் திகதி கோண்டாவில் இராணுவ சாவடியில் ரஜினி வேலாயுத பிள்ளை (வயது 24) என்ற இளம்பெண் கடத்தப்பட்டார். இவர், வெளிநாடு செல்வதற்கு முதல் நாள் மானிப்பாயிலிருந்த சிறிய தாயாரிடம் பிரியாவிடை பெறுவதற்காக சென்று கொண்டிருந்த போதே கடத்தப்பட்டார்.

இவ்வாறு கடத்தப்பட்ட பெண் கூட்டுப் பாலியல் வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டார். தொடர்ந்து அவரின் உடல் இராணுவம் பயன்படுத்திய வீடொன்றின் மலசலகூட குழியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் பல தரப்புகளிலும் இருந்து ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களை தொடர்ந்து இராணுவத்தினர் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்த வழக்கு பின்னர், பாதுகாப்பு காரணங்களை காட்டி கொழும்புக்கு மாற்றப்பட்டது. 2001ஆம் ஆண்டு சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு ஜூரியின் உடன்பாட்டின் மூலம் இராணுவத்தினர் மூவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மரண தண்டனை பெற்ற இராணுவத்தினர் இருவர் மேன்முறையீட்டு நீதிமன்மறத்தில் மேல்முறையீடு செய்திருந்தனர். இந்த வழக்கிலேயே அவர்கள் இருவரும் குற்றமற்றவர்கள் என்று நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். மற்றோர் இராணுவ அதிகாரிக்கு எதிராக மீள்விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஐ.எம்.எவ்...

முக்கிய அளவுருக்கள் தொடர்பில் இலங்கையுடன் கொள்கை ரீதியான உடன்படிக்கைக்கு வந்துள்ளதாக உத்தியோகபூர்வ கடன் குழு (Official Creditor Committee - OCC) குழுவினர் தெரிவிக்கின்றனர்.

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தின் கீழ், நிலுவையில் உள்ள 590 கோடி அமெரிக்க டொலர்கள் மறுசீரமைப்பு செய்யப்படவுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவில் பாரிஸ் கிளப்புடன் இந்தியா மற்றும் ஹங்கேரி ஆகியவை அடங்கும். உத்தியோகபூர்வ கடனாளிகள் குழு இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணைத் தலைவர்களாக உள்ளன.

இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பது குறித்து இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் கடந்த ஒரு வருடகாலமாக கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது.

இதன் பிரகாரம் முதல்கட்ட கடன் மறுசீரமைப்புக்கு சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் அளித்தது. இரண்டாம் கட்ட கலந்துரையாடல்கள் கடந்த சில மாதங்களாக இடம்பெற்று வந்த நிலையில், பாரிஸ்கிளப்புடன் இணைந்து பணியாற்றிய நாடுகள் இலங்கைக்கு உரிய பதிலை நேற்று அளித்தன.

இதன் அடிப்படையில், இரண்டாம் தவணை கடன் வசதி விரைவில் இலங்கைக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## தென்னக்கோன்...

எவற்றையும் கருத்தில் கொள்ளாது அவரை பதில் பொலிஸ் மா அதிபராக நியமித்துள்ளதன் மூலம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டு மக்களின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித அக்கறையும் இல்லை என்பதும் தெளிவாகிறது எனவும் கர்தினால் தெரிவித்தார்.

கத்தோலிக்க ஆயர் பேரவை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

273 அப்பாவி மக்களை கொலை செய்த, மேலும் 500 பேரை படுகாயமடையச் செய்து அவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிய - உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களை தடுப்பதற்கான வாய்ப்புகள் காணப்பட்ட போதிலும் அதனை உதாசீனப்படுத்தியமை தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் குற்றஞ்சாட்டப்பட்டு அவருக்கு (தென்னக்கோன்) எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான நபர் ஒருவரை பதில் பொலிஸ் மா அதிபராக நியமித்துள்ளதன் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்களின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித அக்கறையும் இல்லை என்பது புலப்படுகிறது - என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## போராளிகளை...

சிறார் சிலர் அணிந்திருந்தனர் என்றும் அது தொடர்பான ஒளிப்படங்கள் சமூகவலைதளங்களிலும் பரவின.

இந்த விடயம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்த நிலையில், பெண் போராளிகளின் உடைகளை ஒத்த ஆடையை அணிந்த சிறுவர்களின் பெற்றோரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

அவர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## இலங்கை - இந்திய...

இந்திய தலைநகர் புதுடில்லியில் அமைந்துள்ள 'பிரஸ் கிளப் ஒவ் இந்தியாவில் நேற்று புதன்கிழமை செய்தியாளர்கள் மற்றும் சமூக, சமய அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்த போதே வடக்கு, கிழக்கு பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் புதுடில்லியில் தங்கியுள்ள விக்னேஸ்வரன் எம்.பி. 'ஈழநாடு' நாளிதழுக்கு தகவல் தருகையில் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

இலங்கையில் பெரும்பான்மை சிங்கள மக்களும் அவர்கள் வாழும் பகுதிகளும் சீனா சார்பு நிலையில் செயற்பட்டு வருகின்றார்கள். ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இந்தியாவின் தென் பகுதிக்கு அருகாமையில் உள்ளன. அத்தோடு கலாசாரம், சமயம், மொழி உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலும் இந்தியாவுடன் மிக நெருக்கமான தொடர்புகளை கொண்டுள்ளது.

அந்த வகையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள பெரும்பான்மையானவர்கள் எங்களது கடவுள் இந்தியா - எம்மை ஆதரவாக பார்த்துக்கொள்ளும் என்ற நிலைப்பாட்டில் நம்பிக்கையுடன் இருக்கின்றனர். அதுமட்டுமன்றி இந்த நம்பிக்கையானது எமது பாதுகாப்பையும் இந்தியாவின் தென்பிராந்திய தேசிய பாதுகாப்பையும் உறுதி செய்வதாக உள்ளது. அதனடிப்படையில் இந்த விடயம் பூகோள ரீதியாக முக்கியமான தாகும்.

இரண்டாவதாக சிங்கள பௌத்த திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்களுக்கு நாம் நேரடியான சாட்சியாளர்களாக இருக்கின்றோம். பிரித்தானிய காலனித்துவம் முடிவுக்கு வந்தது. அதன்பின்னர் இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 21ஆவது பிரிவில் சிறுபான்மை மக்கள் பாகுபாட்டுக்கு உட்படுத்தப்படக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு இருக்கதக்கதாக முதலில் இந்திய தமிழர்களின் குடியுரிமையை பறித்து அவர்களை நாடு கடத்தினார்கள். அதன் பின்னர் சிங்களம் மட்டும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக இனக்கலவரங்கள் அரங்கேற்றப்பட்டு தமிழ் மக்கள் நாட்டிலிருந்து வெளியேறும் நிலைக்கு வலிந்து தள்ளப்பட்டார்கள். இதனால் தற்போது பல இலட்சம் தமிழ் மக்கள் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் நிலைமை உருவாகியுள்ளது.

தொடர்ந்து எமது இளைஞர்கள், யுவதிகள் பல்கலைக்கழகங்களில் உள்நுழைவதை கட்டுப்படுத்தும் வகையில் தரப்படுத்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தோடு இலங்கை அரசாங்கத்தின் மிலேச்சத்தனமான செயற்பாடுகள் தொடர்ந்ததன் காரணமாக இளைஞர்கள் ஆயுதங்களை கையிலெடுத்தார்கள். விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஆயுத ரீதியான போராட்டம் கடந்த 30 ஆண்டுகளாக நடைபெற்றிருந்தது.

ஆயுதப் போராட்டம் நிறைவுக்கு வந்ததன் பின்னரும், தமிழர்களின் பூர்வீகப் பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்து சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளுதல் பௌத்த மதம் சார் நிர்மாணங்களை மேற்கொள்ளுதல் என்று திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்களை அரசாங்கம் கொள்கை ரீதியாக முன்னெடுத்து வருகின்றது. இந்து மத தலங்கள் பௌத்த தலங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இந்து தலங்கள் அழிக்கப்பட்டு பௌத்த தலங்களாக மாற்றப்படுகின்றன.

அரசாங்கம் தொடர்ச்சியாக தமிழர்களை ஒதுக்கும் செயல்பாட்டை பல்வேறு வழிகளில் முன்னெடுத்து வருகின்றது.

இலங்கை இராணுவத்தில் மூன்றில் இரு பங்கினர் வடக்கு - கிழக்கில் நிலைகொண்டுள்ளனர். எமது பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. படைகள், புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்களால் தமிழ் மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

தமிழர்கள் தமது பூர்வீக நிலங்களில் பாதுகாக்கப்படுவதும் அவர்களுக்கான நீதி நிலைநாட்டப்படுவதும் உறுதி செய்யப்பட வேண்டுமாக இருந்தால் அதற்கான வகிபாகத்தை இந்தியாவாலேயே மேற்கொள்ள முடியும். இவ்விதமான நிலைமைகள் மூன்று தசாப்தத்துக்கு முன்னதாகவே காணப்பட்டமையை உணர்ந்த காரணத்தால் தான் இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டது.

அந்த ஒப்பந்தம் தற்போது வரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. வடக்கு - கிழக்கு தமிழர்கள் தற்போது பாதுகாப்பற்ற நிலைமையை உணர்ந்துள்ளார்கள். அவர்களின் விடயங்களில் கரிசனைகளை கொள்வதற்கு சரியான தொரு நிறுவனக் கட்டமைப்பு காணப்படவில்லை. ஆகவே, 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம், இந்தியா தனது தென்பிராந்தியத்தின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு வடக்கு - கிழக்கு தமிழர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முடியும் - என்றார். (ஐ)

## நாட்டின்

பொலிஸ் மா அதிபராக நியமனம் பெற்ற அவர் நேற்று கொழும்பு கங்காராமை விகாரையில் வழிபட்டபின்னர் செய்தியாளர்களை சந்தித்தார். அங்கு கருத்து வெளியிட்ட அவர்,

"நான் சமார் 25 வருடங்களாக வெவ்வேறு பொலிஸ் பதவிகளில் கடமையாற்றியுள்ளேன். எனக்கு அனுபவம் உள்ளது. நாட்டு மக்களின் நலனுக்காக இலங்கை பொலிஸ் சேவையை முன்னோக்கி கொண்டு செல்வேன்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எனது முதன்மை இலக்காகும். மேலும், நாட்டில் போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிப்பது எனது இரண்டாவது பொறுப்பாகும். இன்று கிராமப்புற பாடசாலைகளில்கூட மாணவர்களிடத்தில் போதைப்பொருள் பாவனை பெரும் பிரச்னையாக மாறிவிட்டது.

நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதனை கட்டுப்படுத்த நான் முன்னுரிமை அளிப்பேன். நான் பொறுப்பில் இருந்த சந்தர்ப்பங்களில் எவ்வாறு செயல்பட்டேன் என்பதை அனைவரும் நன்கு அறிவர் - என்றார். (ஐ)

## பதில்...

மா அதிபராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று நியமிக்கப்பட்டார்.

மூன்று மாத காலத்துக்கு அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

முன்னதாக, தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படுவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது. இதனால், மூன்று தடவைகள் முன்னாள் பொலிஸ் மா அதிபருக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டது. மேலும், அவருக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட முடியாத நிலையில் அவர் ஓய்வு பெற்றார்.

இந்த நிலையிலேயே தேசபந்து தென்னக்கோன் பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார். ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவுக்கு நெருக்கமானவராகக் கருதப்படுகிறார். கடந்த ஆண்டு காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்திய போது மேல் மாகாணத்துக்கு பொறுப்பாக இருந்த இவர் அந்தத் தாக்குதலை தடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படுபவரின் பதவி காலத்தை அதிகபட்சமாக மூன்று வருடங்களுக்கு மட்டுப்படுத்தும் யோசனை அமைச்சரவையில் சமர்ப் பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு - கிழக்கில் 3 வருடங்களில் மீள்குடியேற்றம் நிறைவடையும்!

## சபையில் கூறினார் அமைச்சர் பிரசன்ன



கொழும்பு, நவ. 30

**வடக்கு-கிழக்கிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த அனைவரையும் அடுத்த 3 வருடங்களுக்குள் மீள்குடியமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.பாராளுமன்றில் இன்று உரையாற்றிய அவர், 2027ஆம் ஆண்டுக்குள் கண்ணிவெடிகள் அற்ற நாடாக இலங்கையை மாற்ற விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், வடக்கையும் கிழக்கையும் அபிவிருத்தி செய்ய பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அப்பகுதி மக்கள் எந்தவகையிலும் பாதிக்காத வகையில் இந்த செயற்பாடுகளை நாம் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தோம்.

தற்போதும், யுத்தம் காரணமாக அகதிகளாக இடம்பெயர்ந்தவர்களை சொந்த பகுதிகளில் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக 1 இலட்சத்து 47 ஆயிரத்து 848 வீடுகளை, அரசாங்கம் பல்வேறு தரப்பினரின் உதவியுடனும் நிர்மானிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் 1700 வீட்டுத் தொகுதிகளில் நிர்மானப் பணிகள் பூரணமாகியிருக்கவில்லை.

இவ்வருட ஆரம்பத்தில் நாம் மேலும் 1665 வீடுகளை நிர்மாணிக்க நாம் நடவடிக்கை எடுத்தோம்.

150 மில்லியன் ரூபாய் நிதி இதற்காக ஒதுக்கப்பட்டது. உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 500 மில்லியன் ரூபாயும் வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது.

3 வருடங்களுக்குள் வடக்கு-கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த அனைவரையும் குடியமர்த்த முடியும் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

2024 ஆம் ஆண்டிலிருந்து 2027 ஆம் ஆண்டுக்குள், கண்ணி வெடிகள் அற்ற நாடாக இதனை மாற்ற நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

வடக்கு - கிழக்கில் 204 வர்க்க கிலோ மீற்றர் அளவில், கண்ணி வெடிகளை அகற்றி, அந்தக் காணிகளை மக்களிடத்தில் ஒப்படைத்துள்ளோம்.

இன்னும் 15 வர்க்க கிலோ மீற்றர் காணிகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்ற வேண்டியுள்ளது.

இதற்காக சர்வதேசத்தின் நிதியுதவிகள் எமக்கு கிடைத்துள்ளன - என்றார். (அ)

# யாழ்.நோக்கிச் சென்ற பஸ்கள் மீது அநுராதபுரத்தில் வைத்து கல் வீச்சு!

வவுனியா, நவ. 30

யாழ்.நோக்கிப் பயணித்த மூன்று பஸ்கள் மீது நேற்று முன்தினம் இரவு அநுராதபுரம் பகுதியில் வைத்து மர்ம நபர்கள் சிலரால் கல் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ்கள் இரண்டு மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஆகியவற்றின் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய நபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலினால் பஸ்களின் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

இது குறித்து பஸ்களின் சாரதிகளால் நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# டுபாய் புறப்பட்டார் ரணில்

கொழும்பு, நவ. 30

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மூன்று யோசனைகளை முன்வைக்க உள்ளார்.

காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்தை இலங்கையில் நிறுவுவதே இலங்கையின் பிரதான முன்மொழிவாகும்.

வளர்ந்த நாடுகளின் செயல்பாடுகளால் சிரமப்படும் மூன்றாம் உலக நாடுகளுக்கான காலநிலை நீதி மன்றத்தை நிறுவுதல் மற்றும் வெப்பமண்டல மன்றத்தை நிறுவுதல் ஆகிய இரண்டு முன்மொழிவுகளையும் ஜனாதிபதி முன்வைக்க உள்ளார்.

கோப்-28 மாநாட்டில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நோக்கி புறப்பட்டார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையின் கீழ் இலங்கையிலிருந்து 20 இளைஞர் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க, காலநிலை மாற்றத்திற்கான ஜனாதிபதி ஆலோசகர் ருவான் விஜயவர்தன ஆகியோர் இலங்கையின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் குழுவை ஜனாதிபதி தலைமையில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். மற்றும் ஜனாதிபதியின் வெளிவிவகார பணிப்பாளர் தினுக் கொலம்பகே உட்பட மேலும் சில முக்கிய பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர். (அ)

# தாய்லாந்து சபாநாயகரை சந்தித்தார் கிழக்கு ஆளுநர்



பாங்கொக், நவ. 30

தாய்லாந்து சபாநாயகரின் அழைப்பின் பேரில் தாய்லாந்து பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் கலந்துகொண்டார்.

சபாநாயகர், செனட் தலைவர், இராஜதந்திரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களை செந்தில் தொண்டமான் தெரிவித்ததுடன் நிகழ்வில் கலந்து கொண்டும் சிறப்பித்திருந்தார்.

இதன்போது இலங்கை மற்றும் தாய்லாந்துக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் இரு தரப்பு கலந்துரையாடல்களும் இடம்பெற்றுள்ளன. (அ)

# தேசிய தேர்தலை இலக்கு வைத்து பிரசாரத்துக்கு தயாராகும் மொட்டு

கொழும்பு, நவ. 30

தேசிய மட்டத்திலான தேர்தலை இலக்கு வைத்து ஜனவரி முதல் கிராமிய மட்டத்திலான தேர்தல் பிரசார நடவடிக்கையை மேற்கொள்வதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய சம்மேளனம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது கட்சியின் முக்கிய சில பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதுடன், புதிய நியமனங்களும் இடம்பெறவுள்ளன .

2024 வரவு - செலவுத் திட்டக் கூட்டத்தொடர் டிசெம்பரில் முடிவடைந்த பின்னர் பாராளுமன்றம் ஜனவரி வரை ஒத்திவைக்கப்பட்டு, ஒருமாத கால விடுமுறை வழங்கப்படும்.

அந்த காலப்பகுதியிலேயே வழமையாக பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணங்களில் ஈடுபடுவார்கள்.

எனவேதான் ஜனவரி முதல் முழு வீச்சுடன் பிரச்சாரத்தில் இறங்குவதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் அடுத்த வருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# “இரண்டு தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்துங்கள்!”

கொழும்பு, நவ. 30

ஜனாதிபதித் தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்தினால் நாட்டுக்கு பெருமளவு பணத்தை மிச்சப்படுத்த முடியும் எனவும், இதற்காக சட்ட ரீதியாக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் ஆதரவு வழங்கத் தயார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

மக்கள் ஆணையைக் கொண்ட ஜனாதிபதியும் அரசாங்கமும் தான் நாட்டிற்குத் தேவை என்றும், ஜனாதிபதித் தேர்தலையும்,பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவதே ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் ஒரே நாளில் அகற்றுவதற்கான சிறந்த சந்தர்ப்பம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் வ்மேலும் தெரிவிக்கையில்-

சட்டங்களை மாற்றுவேன், திருடர்களை பிடிக்கும் வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுப்பேன்,

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுவேன் என ஜனாதிபதி பதவியேற்றதன் பின்னர் பாராளுமன்றத்திலும் நாட்டிலும் அறிக்கைகளை விடுத்தார்.என்றாலும் இன்று ஜனாதிபதி அந்த விடயங்களையெல்லாம் மறந்துவிட்டார்.நாட்டின் பணத்தை திருடிய நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தி அந்த பணத்தை நாட்டுக்கு கொண்டு வர ஜனாதிபதிக்கு தற்போது விருப்பம் இல்லை போலும்.

ரணில் ராஜபக்ச அரசாங்கம் திருடர்களுடன் காலம் கடத்துவது போல் தெரிகிறது.

நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்த திருடர்களை பாதுகாக்கும் வேலைத்திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார்.நாட்டின் செல்வத்தை கொள்ளையடித்த திருடர்கள் ஜனாதிபதியை பாதுகாக்கின்றனர். நாட்டின் செல்வத்தை கொள்ளையடித்த திருடர்களை ஜனாதிபதி பாதுகாக்கிறார். நாட்டின் செல்வங்களை கொள்ளையடித்த திருடர்களை ரணில் ராஜபக்ச அரசாங்கம் ஒருபோதும் சட்டத்தின் முன் நிறுத்தாது.அந்த திருடர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டுமானால் ரணில் ராஜபக்ச அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டார் என ஒரு குழுவினர் தெரிவிக்கின்றனர்.ஜனாதிபதி கேட்டாலும் சரி கேட்காவிட்டாலும் சரி விரைவில் ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் நடத்துங்கள்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ராஜபக்சர்கள் உதவிய போதிலும் நாம் அவரை தோற்கடிப்போம். ரணில் விக்கிரமசிங்க தனியாகக் கேட்டாலும் அவரை தோற்கடிப்போம்.- என்றார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு





# ரி - 20 உலக கிண்ணம் நமீபியா அணி தகுதி

டுபாய், நவ. 30

2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள இருபது - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடருக்கு நமீபியா அணி தகுதி பெற்றுள்ளது.

ஐ. சி. சி. இருபது - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் அடுத்த ஆண்டு ஜூன் 4 முதல் 30ஆம் திகதி வரை மேற்கு இந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது. இதில் மொத்தம் 20 அணிகள் கலந்துகொள்கின்றன.

போட்டியை நடத்தும் அமெரிக்கா மற்றும் மேற்கு இந்தியத் தீவுகள் அணிகள் நேரடியாகவும், 2022ஆம் இருபது - 20 உலகக் கிண்ணத்தில் முதல் 8 இடங்களை பிடித்த அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நெதர்லாந்து, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை அணிகளும் இவற்றுடன் 2022ஆம் ஆண்டு நவம்பர் 14 தரவரிசை அடிப்படையில் ஆப்கானிஸ்தான் மற்றும் வங்கதேசம் அணிகளும் என 12 அணிகள் உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாக தகுதி பெற்றுள்ளன.

மீதம் உள்ள 8 அணிகள் தகுதி சுற்று வாயிலாக தெரிவு செய்யப்படவுள்ளன. இதில் அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, பப்புவா நியூ கினியா, கனடா, நேபாளம், ஓமான் ஆகிய நாடுகள் தகுதி சுற்றுகளில் வெற்றி பெற்று தகுதி பெற்றன. இந்த வரிசையில் தற்போது நமீபியா இணைந்துள்ளது.

ஆப்பிரிக்க பிராந்திய தகுதி சுற்றில் நமீபியா அணி தனது 5ஆவது லீக் ஆட்டத்தில் தன்சானியாவை தோற்கடித்துள்ளது.

# மக்ஸ்வெல்லின் அதிரடியால் ஆஸியிடம் வீழ்ந்தது இந்தியா

குவாஹாட்டி, நவ. 30

கிளென் மக்ஸ்வெல்லின் வழக்கமான அதிரடி ஆட்டத்தால் இந்திய அணியை 5 விக்கெட்களால் வீழ்த்தியது அவுஸ்திரேலிய அணி. இதன் மூலம் இந்தியாவுக்கு எதிரான தொடரை 2-1 என்ற கணக்கில் அந்த அணி தக்கவைத்துள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 3ஆவது இருபது - 20 கிரிக்கெட் போட்டி குவாஹாட்டியில் நேற்று முன்தினம் இரவு நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மத்தியூ வேட் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இந்திய அணி யில் முகேஷ் குமாருக்கு பதிலாக அவேஷ்கான் இடம் பெற்றார். அவுஸ்திரேலிய அணியில் 4 மாற்றங்கள் இருந்தன. டிராவிஸ் ஹெட், அரோன் ஹார்ட்டி, ஜேசன் பெஹ்ரன்டோர்ப், கேன் ரிச்சர்ட்சன் ஆகியோர் விளையாடும் பதினொருவரில் இல்லை.

துடுப்பாட்டத்தைத் தொடங்கிய இந்திய அணிக்கு தொடக்கம் சற்று அதிர்ச்சியாக இருந்தது. யஷஸ்வி ஜெய்ஸ்வால் 6 ஓட்டங்களில் ஜேசன் பெஹ்ரன்டோர்ப் பந்தில் விக்கெட் காப்பாளர் மத்தியூ வேடிடம் பிடி கொடுத்து வெளியேறினார். இதைத் தொடர்ந்து களமிறங்கிய இஷான் கிஷன்5 பந்துகளை சந்தித்து ஓட்டம் ஏதும் எடுக்காமல் கேன் ரிச்சர்ட்சன் பந்தில் கவர் திசையில் நின்ற மார்கஸ் ஸ்ரொய்னிஸிடம் பிடி கொடுத்து நடையை கட்டினார். இதன் பின்னர் ருதுராஜ் கெய்க்வாட்டுடன் இணைந்த அணித் தலைவர் சூர்யகுமார் யாதவ் மட்டையை சுழற்றினார்.

அதிரடியாக விளையாடிய சூர்யகுமார் யாதவ் 29 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அரோன் ஹார்டி பந்தில் மத்தியூ வேட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 10.2 ஓவர்களில் 81 ஆக இருந்தது. இதையடுத்து களமிறங்கிய திலக் வர்மா நிதானமாக விளையாட ருதுராஜ் கெய்க்வாட், அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சை வெளுத்து வாங்கினார்.

ருதுராஜ் கெய்க்வாட் 52 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 11 பௌண்ட்ரிகளுடன் சதம் விளாசினார். சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் இது அவரது



முதல் சதமாக அமைந்தது. அவரது அபாரமான ஆட்டத்தால் 20 ஓவர்களில் இந்திய அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 222 ஓட்டங்கள் குவித்தது. ருதுராஜ் கெய்க்வாட் 57 பந்துகளில், 7 சிக்ஸர்கள், 13 பௌண்ட்ரிகளுடன் 123 ஓட்டங்களும் திலக் வர்மா 24 பந்துகளில் 4 பௌண்ட்ரிகளுடன் 31 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

223 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு விளையாடிய அவுஸ்திரேலியாவில் அரோன் ஹார்டி 3 பௌண்ட்ரிகளுடன் 16, டிராவிஸ் ஹெட் 8 பௌண்ட்ரிகளுடன் 35 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். 3ஆவது வீரரான ஜோஷ் இங்லிஸ் 2 பௌண்ட்ரிகளுடன் 10, மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 2 பௌண்ட்ரிகளுடன் 17, டிம் டேவிட் ஓட்டம் எதுவும் பெறாமல் வெளியேற்றப்பட்டனர்.

4ஆவது வீரராக வந்த கிளென் மக்ஸ்வெல் அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். அவரோடு அணித் தலைவர் மத்தியூ வேட் இணைய, 6ஆவது விக்கெட்டுக்கு 91 ஓட்டங்கள் சேர்த்து அணியை அதிரடியாக வெற்றிக்கு வழிநடத்தியது இந்தக் கூட்டணி.

20 ஓவர்கள் முடிவில் அவுஸ்திரேலியா 5 விக்கெட்கள் இழப்புக்கு 225 ஓட்டங்களை குவித்து 5 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

மக்ஸ்வெல் 48 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர்களுடன் 104, வேட் 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 28 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்திய தரப்பில் ரவி பிஷ்னோய் 2, அர்ஷ்தீப் சிங், ஆவேஷ் கான், அக்ஸர் படேல் ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர். (ஐ)

# நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் பங்களாதேஷ் 310 ஓட்டங்கள்

சில்ஹெட், நவ. 30

நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதல் நாள் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 310 ஓட்டங்கள் குவித்தது.

டிம் சௌதி தலைமையிலான நியூஸிலாந்து கிரிக்கெட் அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக பங்களாதேஷ் சென்றுள்ளது. இதில் முதல் போட்டி சில்ஹெட் நகரில் தொடங்கி யது. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் நஜ்முல் ஹூசைன் ஷான்டோ துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார். துடுப்பாட்டத்தைத் தொடங்கிய அந்த அணிக்கு மஹ்மதுல் ஹசன் ஜோய், சகீர் ஹசன் இணை நிதானமான தொடக்கம் கொடுத்தது.



சகீர் ஹசன் 41 பந்துகளில், ஒரு பௌண்ட்ரியுடன் 12 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஜாஸ் பட்டேல் பந்தில் ஆட்டமிழந்தார். முதல் விக்கெட்டுக்கு இந்த இணை 12.3 ஓவர்களில் 39 ஓட்டங்கள் சேர்த்தது. இதன் பின்னர் களமிறங்கிய நஜ்முல் ஹூசைன் ஷான்டோ விரைவாக ஓட்டங்கள் சேர்த்தார். அவர் 35 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 37 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கிளென் பிலிப்ஸ் பந்தை விளாசி பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

மஹ்மதுல் ஹசன்ஜோயுடன் இணைந்து 2ஆவது விக்கெட்டுக்கு 53 ஓட்டங்கள் சேர்த்தார் நஜ்முல் ஹூசைன் ஷான்டோ. இதைத் தொடர்ந்து களமிறங்கிய மொமினுல் ஹக் இணைப்பாட்டத்தை கட்டமைக்க முயன்றார். மதிய உணவு இடைவேளையில் பங்களாதேஷ் அணி 27 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 104 ஓட்டங்கள் எடுத்தது. உணவு இடைவேளைக்கு பின்னர் பங்களாதேஷ் அணி தொடர்ந்து விளையாடியது. 88 ஓட்டங்கள் சேர்த்த இந்த இணையைகிளென் பிலிப்ஸ் பிரித்தார். மொமினுல் ஹக் 78 பந்துகளில், 4 பௌண்ட்ரிகளுடன் 37 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கிளென் பிலிப்ஸ் பந்தில் விக்கெட் காப்பாளர் டாம் பிளண்டலிம் பிடி கொடுத்து நடையை கட்டினார்.

தனது 4ஆவது அரைச்சதத்தை அடித்த மஹ்மதுல் ஹசன் ஜாய் 166 பந்துகளில், 11 பௌண்ட்ரிகளுடன் 86 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இஷ் சோதி பந்தில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் சீரான இடைவெளியில் பங்களாதேஷ் அணி விக்கெட்களை இழந்தது. முஸ்பிகுர் ரகிம் 12, மெஹிதி ஹசன் 20, ஷஹதத் ஹூசைன் 24, நூருல் ஹசன் 29, நயீம் ஹசன் 16 ரன்களில் ஆட்டமிழந்தனர்.

முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் பங்களாதேஷ் அணி 85 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 310 ஓட்டங்கள் எடுத்தது. தைஜுல் இஸ்லாம் 8, ஷோரிபுல் இஸ்லாம் 13 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நியூஸிலாந்து அணி சார்பில் கிளென் பிலிப்ஸ் 4, கைல் ஜேமிசன் 2, அஜாஸ் படேல் 2, இஷ் சோதி 1 விக்கெட் கைப்பற்றினர்.

# இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுநராக ராகுல் டிராவிட்

புதுடில்லி, நவ. 30

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டின் ஒப்பந்தத்தை நீட்டிப்பதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ரி - 20 உலகக் கிண்ணத்தில் இந்திய அணி வெளியேறிய பிறகு அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக ராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டார். அதன்பின், அவரது பயிற்சியின்கீழ் இந்திய அணி கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு வெற்றிகளை பெற்றுள்ளது.

இருப்பினும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப், ஒருநாள் உலகக் கிண்ணம் போன்ற தொடர்களில் இந்திய அணி கிண்ணம் வெல்லவில்லை.

இதற்கிடையே, உலகக் கிண்ண ஒருநாள் தொடருடன் இந்திய அணியில் தலைமை பயிற்றுநருக்கான இரண்டு ஆண்டு ஒப்பந்தம் முடிவுக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து, மீண்டும் ராகுல் டிராவிட்டை பயிற்சியாளராக நியமிக்க இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் விருப்பம் தெரிவித்ததை தொடர்ந்து, அவரின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# தெலுங்கானா: பா.ஜ.கவை முந்திய காங்கிரஸ் ஒன்றரை ஆண்டுகளில் நிலைமை மாறியது எப்படி?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

இந்தியாவில் தெலங்கானா மாநிலம் உருவானதிலிருந்து ஆட்சியில் இருக்கும் பாரத் ராஷ்ட்ர சமிதிக்கு கடும் போட்டியைக் கொடுத்து வருகிறது காங்கிரஸ் கட்சி. கடந்த ஆண்டுவரை பின்னடைவைச் சந்தித்துவந்த காங்கிரஸ் இந்த நிலைக்கு வந்தது எப்படி? பா.ஜ.கவின் நிலை என்ன?

சில வருடங்களுக்கு முன்வரை, இந்தியாவில் தேர்தல் நடக்கும் மாநிலங்களுக்குச் சென்றால் அது ஒரு திருவிழாவிற்குள் சென்றதைப் போல இருக்கும். சுவரொட்டிகள், வாக்குக் கேட்டபடி செல்லும் வாகனங்கள், ஊர்வலங்கள், பேரணிகள் என மாநிலமே விழாக்கோலம் பூண்டிருக்கும்.

ஆனால், கடந்த சில ஆண்டுகளில் இந்தப் போக்குக் குறைந்து வருகிறது. தேர்தல் நடப்பதற்கான சுவடே பல இடங்களில் இருப்பதில்லை. இன்னும் சில நாட்களில் தேர்தலைச் சந்திக்கவிருக்கும் தெலங்கானாவும் அப்படித்தான் இருக்கிறது.

சாலைகளின் நடுவில் உள்ள தூண்களில் முதலமைச்சரும் பாரத ராஷ்டிர சமிதி (பி.ஆர்.எஸ்)யின் தலைவருமான கே. சந்திரசேகர ராவின் படங்கள் பளிச்சிடுகின்றன. எப்போதாவது ஏதாவது ஒரு கட்சிக்கு வாக்குக் கேட்கும் போஸ்டர்கள் ஒட்டிய வாகனம் கடந்து சொல்கிறது. அவ்வளவுதான். மற்றபடி, மாநில அளவிலான தேசிய அளவிலான தலைவர்கள் வந்தால் மட்டுமே சற்று கூட்டம் கூடுகிறது.

வெளித்தோற்றம் இப்படி இருந்தாலும், மாநிலத்தில் போட்டி மிகக் கடுமையாக இருக்கிறது. தெலங்கானா மாநிலம் உருவானதிலிருந்து இரண்டு முறை தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கிறது பி.ஆர்.எஸ். (முன்பு டி. ஆர்.எஸ்.). தான் செயல்படுத்திய மக்கள் நலத் திட்டங்களை முன்னிறுத்தி ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள தீவிரமாகக் களமிறங்கியிருக்கிறது அந்தக் கட்சி.

ஆனால், கடந்த இரண்டு தேர்தல்களிலும் படுதோல்வியைச் சந்தித்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி இந்த முறை, பி.ஆர்.எஸ்சுக்கு கடுமையான போட்டியைக் கொடுத்து வருகிறது. மொத்தமுள்ள 119 சட்டமன்றத் தொகுதிகளில் 118 தொகுதிகளில் இந்தக் கட்சி போட்டியிடுகிறது. ஒரு இடத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடுகிறது.

பா.ஜ.க. 111 இடங்களிலும் அதன் கூட்டணிக் கட்சியான ஜன சேனா கட்சி 8 இடங்களிலும் போட்டியிடுகின்றன. இது தவிர ஏஐஎம்ஐஎம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவையும் களத்தில் இருக்கின்றன.

பாரத் ராஷ்ட்ர சமிதி - காங்கிரஸ் கூட்டணி - பா.ஜ.க. கூட்டணி என மும்முனைப் போட்டி நிலவுவதைப் போலத் தோற்றம் இருந்தாலும், களத்தில் பாரத் ராஷ்ட்ரிய சமிதிக்கும் காங்கிரஸுக்கு இடையில்தான் கடுமையான போட்டி நிலவுகிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நான்கு இடங்களைப் பிடித்த பா.ஜ.க. தற்போது மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், தெலங்கானாவின் தேர்தல் களம் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் வெகுவாக மாறியிருக்கிறது.

“2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. நான்கு இடங்களைப் பிடித்த பிறகு, அக்கட்சி மிகத் தீவிரமாகச் செயல்பட்டது. எல்லோரும் அந்தக் கட்சியைப் பற்றியே பேசினார்கள். பி.ஆர்.எஸ்சைப் பிடிக்காதவர்கள் பா.ஜ.க. பக்கம் சாய ஆரம்பித்தார்கள். மத்தியில் ஆட்சியில் இருப்பதால் பா.ஜ.கவால்தான் பி.ஆர்.எஸ்சைக் கட்டுப்படுத்த முடியும் என நினைத்தார்கள். ஆகவே, பிஆர்எஸ்சுக்கு மாற்று பா.ஜ.கதான் என்ற தோற்றம் ஏற்பட்டது. வேறு கட்சிகளில் இருந்தெல்லாம் தலைவர்கள் பா.ஜ.கவில் சேர ஆரம்பித்தார்கள்.”






‘ஆனால், பி.ஆர்.எஸ்சைக் கடுமையாக எதிர்ப்பது காங்கிரசிற்குத்தான் உதவும் என பா.ஜ.க. நினைத்தது. மற்றொரு பக்கம் மதுக் கொள்கை முறைகேடு விவகாரத்தில் ஆம் ஆத்மியின் மனீஷ் சிசோடியா கைதுசெய்யப்பட்டார். ஆனால், அதே போன்ற குற்றச்சாட்டை எதிர்கொண்ட பிஆர்எஸ்சின் கவிதா கைதுசெய்யப்படவில்லை. ஆகவே, இரு கட்சிகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக மக்கள் நினைத்தார்கள்” என்கிறார் அரசியல் செயற்பாட்டாளரும் தெலங்கானா ஜன சமிதி அமைப்பின் தலைவருமான எம். கோதண்டராம்.

காங்கிரசைப் பொறுத்தவரை என்னதான் கீழ் மட்டத்தில் கட்சிக் கட்டமைப்பு இருந்தாலும், பா.ஜ.கவின் சுறுசுறுப்பின் காரணமாக காங்கிரஸ் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்ட தோற்றம் ஏற்பட்டது.

இந்த நிலையில், 2021ல் காங்கிரஸின் மாநிலத் தலைவராக இருந்த என். உத்தம் குமார் ரெட்டி மாற்றப்பட்டு, மிகச் சுறுசுறுப்பான அரசியல்வாதியான ஏ. ரேவந்த் ரெட்டி மாநிலத் தலைவராக்கப்பட்டார். இதற்குப் பிறகு, மாநில அரசின் மீதான தாக்குதலை காங்கிரஸ் தீவிரப்படுத்தியது. முதன்மை எதிர்க்கட்சி என்ற நிலையிலிருந்து பா.ஜ.க. மெல்ல மெல்ல பின்னுக்குத் தள்ளப்பட்டு, காங்கிரஸ் அந்த இடத்தை நெருங்கியது.

இதற்கு நடுவில் இந்த ஆண்டு ஜூலை மாதம் பா.ஜ.கவின் மாநிலத் தலைமை மாற்றப்பட்டது. தெலங்கானா மாநிலத்தின் பா.ஜ.க. தலைவராக இருந்த பண்டி சஞ்சய் குமாருக்குப் பதிலாக மத்திய அமைச்சர் ஜி. கிஷன் ரெட்டி நியமிக்கப்பட்டார்.



“ரேவந்த் ரெட்டி மிகப் பெரிய ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்களை ஏற்பாடு செய்தார். அப்போதுதான் காங்கிரசின் வேர்கள் அப்படியே இருக்கின்றன என்பது புரிந்தது. கர்நாடக மாநிலத்தில் காங்கிரசிற்குக் கிடைத்த வெற்றியும் குறிப்பிடத்தக்க அளவில் அவர்களுக்கு ஊக்கம் அளித்தது. தில்லித் தலைமையும் மாநிலத்தில் கட்சியை மறு கட்டமைப்புச் செய்தது. உள்ளூரில் இருந்த அரசியல் செயற்பாட்டாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியது.

பிஆர்எஸ்சுக்கு எதிராக ஒரு கடுமையான நிலைப்பாட்டை எடுக்காவிட்டால், இங்கே பிழைத்திருக்க முடியாது என்பது காங்கிரசிற்குப் புரிந்தது. பா.ஜ.கவைப் போல பி.ஆர்.எஸ்சுடன் எந்தத் தொடர்பையும் வைத்துக் கொள்ளக்கூடாது என முடிவுசெய்தார்கள். அந்த நிலைப்பாட்டில் உறுதியாக நின்றார்கள். இதையடுத்துத்தான் காங்கிரசிற்கான செல்வாக்கு வளரத் துவங்கியது” என்கிறார் கோதண்டராம். இப்போது பாரத் ராஷ்ட்ர சமிதிக்கு பிரதானமான மாற்றாக காங்கிரஸ் கட்சியே காட்சியளிக்கிறது.

பாரத் ராஷ்ட்ரிய சமிதியைப் பொறுத்தவரை கடந்த பத்தாண்டுகளில் பல சமூக நலத் திட்டங்களை செயல்படுத்தியிருக்கிறது.

விவசாயிகளுக்கு நிதி வழங்கும் ரைத்து பந்து, பட்டியலினத்தோருக்கு நிதி உதவி அளிக்கும் தலித்து பந்து, வீடில்லாதவர்களுக்கு இரண்டு அறைகளைக் கொண்ட வீடுகள், முதியோர் உதவித் தொகை அதிகரிப்பு என கடந்த பத்தாண்டுகளில் பாரத் ராஷ்டிர சமிதி செயல்படுத்திய சமூக நலத் திட்டங்கள் அந்தக் கட்சிக்கு ஒரு வலுவான ஆதரவு தளத்தை உருவாக்கியிருக்கின்றன.

ஆனால், பாரத் ராஷ்ட்ர சமிதி அரசு நிறைவேற்றாத வாக்குறுதிகள், அந்த ஆட்சியின் மீது சுமத்தப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள், முதலமைச்சர் கே. சந்திரசேகர ராவ் தன்னிச்சையாக செயல்படுவதாக எழும் விமர்சனங்கள் ஆகியவற்றை வைத்து தேர்தல் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தியிருக்கிறது காங்கிரஸ். குறிப்பாக மிகுந்த பொருட்செலவில் நிறைவேற்றப்பட்ட காலேஸ்வரம் நீர் பாசனத் திட்டத்தில் பெரும் ஊழல் நடந்ததாக தீவிரப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது காங்கிரஸ்.



“இது தவிர, ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரை நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் வெற்றி கிடைத்த பிறகு காங்கிரசால் மட்டும்தான் பி.ஆர்.எஸ்சைத் தோற்கடிக்க முடியும் என்பது மக்களுக்குப் புரிந்துவிட்டது. பி.ஆர்.எஸ்சும் பா.ஜ.கவும் ஒன்றுதான் என்பதையும் மக்கள் புரிந்துகொண்டுவிட்டனர். பி.ஆர்.எஸ்சுக்கு எதிராக களத்தில் பெரும் கோபம் இருக்கிறது” என்கிறார் தெலங்கானாவில் காங்கிரசின் வார் ரூம் பொறுப்பாளரான ரோஹன் குப்தா.

ஆனால், ஊழலைப் பற்றியும் குடும்ப ஆட்சியைப் பற்றியும் பேச காங்கிரசிற்கு என்ன தகுதி இருக்கிறது எனக் கேள்வி எழுப்புகிறார் பாரத் ராஷ்ட்ர சமிதியின் செய்தித் தொடர்பாளரான டாக்டர் ஷ்ரவண் தஸோஜு.

“காங்கிரஸ் ஆட்சியின் மீது இல்லாத ஊழல் புகார்களா? மோதிலால் நேருவிலிருந்து ராகுல் காந்திவரை கட்சியின் தலைமைப் பதவியில் இருந்துவிட்டு, குடும்ப ஆட்சி பற்றி பேசலாமா? கடந்த 70 ஆண்டுகளில் எந்த முதலமைச்சரும் நிறைவேற்றாத பல திட்டங்கள் இந்தப் பத்தாண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நாங்கள் நிறைவேற்றிய வளர்ச்சித் திட்டங்கள், நாங்கள் நிறைவேற்றிய மக்கள் நலத் திட்டங்கள் ஆகியவற்றை வைத்து தேர்தலைச் சந்திப்போம்” என்கிறார் டாக்டர் ஷ்ரவண் தஸோஜு.

இந்தத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையில் இரு கட்சிகளுமே மேலும் பல சமூக நலத் திட்டங்களையும் நேரடி பணப் பலன்களையும் அறிவித்துள்ளன.

### பாரத ராஷ்ட்ர சமிதியின் தேர்தல் வாக்குறுதிகள்

1. தற்போது அளிக்கப்பட்டுவரும் முதியோர் ஓய்வூதியம் 2016 ரூபாயில் இருந்து ஓராண்டில் 3016 ரூபாயாக மாற்றப்படும் என்றும் அதற்கடுத்த நான்காண்டுகளில் 5 ஆயிரம் ரூபாயாக மாற்றப்படும்.

2. விவசாயிகளுக்கான ரயுது பந்து திட்டத்தில் தற்போது ஏக்கருக்கு 10,000 ரூபாய் அளிக்கப்பட்டு வருகிறது. இது அடுத்த ஐந்தாண்டில் 16,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

3. மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் தகுதியானவர்களுக்கு எரிவாயு சிலிண்டர் 400 ரூபாய்க்கு வழங்கப்படும்.

4. மாநிலத்தில் உள்ள வீடில்லாதவர்களுக்கு இடங்கள் வழங்கப்படும். தற்போதுள்ள வீடு வழங்கும் திட்டங்களும் தொடரும்.

### காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வாக்குறுதிகள்

காங்கிரஸ் கட்சி தனது தேர்தல் அறிக்கையில் ஆறு முக்கியத் திட்டங்களை அறிவித்துள்ளது.

1. மகாலக்ஷ்மி திட்டத்தின் கீழ் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 2,500 ரூபாய் வழங்கப்படும். பேருந்தில் இலவசப் பயணம் அளிக்கப்படும். எரிவாயு சிலிண்டர் 500 ரூபாய்க்கு அளிக்கப்படும்.

2. விவசாயிகளுக்கான ரயுது பரோசா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் வழங்கப்படும். விவசாயக் கூலிகளுக்கு 12,000 வழங்கப்படும்.

3. க்ருஹஜோதி திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு 200 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும்.

(16ம் பக்கம் பார்க்க)

# பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப மக்களுடனான நம்பிக்கையை மீளக்கட்டியழுப்பவேண்டும்



கலாநிதி ஜெகான் பெரேரா

தொடர்ச்சியாக பொருளாதார மற்றும் ஒழுக்கநெறி வீழ்ச்சியில் இருக்கும் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதில் மிகவும் கடினமான ஒரு பணியை அரசாங்கம் எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. ஒழுக்கநெறி வீழ்ச்சியை கடந்தவாரம் பாராளுமன்ற அமர்வுகளின்போது காணக்கூடியதாக இருந்தது.

அறகலயவுக்கு முன்னரான காலப்பகுதியில் காணப்பட்ட பொருளாதார மற்றும் ஒழுக்கநெறி வீழ்ச்சியில் இருந்து மாற்றம் துரிதமாக வரும் என்று இருந்த ஆரம்ப எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவிக்கு வந்ததையடுத்து முடிவுக்கு வந்தது.

முதல் சந்தர்ப்பத்தில் கைதேர்ந்த முறையில் பாதுகாப்பு படைகளையும் பிறகு பாராளுமன்ற பெரும்பான்மையையும் பயன்படுத்தி ஜனாதிபதி பழைய ஒழுங்கையும் அரசாங்க ஆட்சியையும் மீள நிலைநிறுத்தியதுடன் குறைந்த மட்டத்தில் என்றாலும் பொருளாதார உறுதிநிலையையும் ஏற்படுத்தினார். இதனால் நெருக்கடிக்கு மத்தியிலும் வழமை போன்று வாழ்க்கையை முன்னெடுக்கக்கூடியவர்களாக இருந்த மக்கள் பிரிவினரினதும் இலங்கை போட்டி வல்லரசுகளுக்கு இரையாகிவிடக்கூடாது என்று விரும்பிய சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் அவரால் பெறக்கூடியதாக இருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியின் இரண்டாவது தவணைக் கொடுப்பனவு வருட இறுதிக்கு முன்னர் இலங்கைக்கு கிடைக்கும் என்று மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார். சர்வதேச நாணய நிதியத்தின் அடிப்படை நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறியிருப்பதற்கு மத்தியிலும் இந்த நம்பிக்கையை அவர் வெளியிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. அரசாங்கத்தின் வருவாய்க்கும் செலவினத்துக்கும் இடையிலான இடைவெளியை குறைக்கவேண்டும் என்பது அந்த நிபந்தனகளில் ஒன்று.

நிபந்தனைகளை நிறைவேற்றுவதை அரசாங்கம் உறுதிப்படுத்தாக நிலையிலும் கூட சர்வதேச நாணய நிதியத்தின் நிதியைப் பெறக்கூடியதாக இருக்கும் ஆற்றல் இலங்கைக்கு சாதகமான நிலை இருப்பதன் ஒரு அறிகுறியாகும்.

அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் அதிகரித்த வரிகளின் மூலமாகப் பெறக்கூடிய வருவாய்களின் மூலமாக தணிக்கக்கூடியதாக இருக்கும் என்று நம்பப்படும் ஒரு இடைவெளியைக் காட்டுகிறது. ஆட்சிமுறையின் குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் முன்மவைத்த யோசனைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது.

ஊழலை ஒழிப்பதற்கு பெரு முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பது தொடக்கம் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதில் வெளிப்படைத் தன்மை இருக்கவேண்டும் என்பது வரை பல யோசனைகளை சர்வதேச நாணய நிதியம் முன்வைத்தது.

சமூக ஊடக அறிக்கைகளையும் தனிப்பட்டவர்கள் கூறுகின்ற கதைகளையும் நம்புவதாக இருந்தால் ஊழல் சகல மட்டங்களிலும் தலைவிரித்தாடுகிறது என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. நிபந்தனைகள், நியமங்கள் பற்றி பெரிதாக தெரியவராத வகையில் சர்வதேச கம்பனிகளுடனான உடன்படிக்கைகள் தொடர்ந்து கைச்சாத்தி டப்படுகின்றன. சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை கூட தொடர்ந்தும் இரகசியமாகவே இருக்கிறது.

ஆனால் தன்னிறைவான பொருளாதார வளர்ச்சிக்கான மாறுதல் ஏற்படும் வரை தற்போதைய திருப்தியற்ற ஆட்சிமுறையை பொறுத்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்று ஒருவித நம்பிக்கை இலங்கை மக்களில் சில பிரிவுகள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் தொடர்ந்து காணப்படுகிறது.

தற்போதைய தருணத்தில் அரசாங்க மாற்றம் ஒன்று இதுவரையில் அடையப்பட்ட பொருளாதார உறுதிப்பாட்டுக்கு குந்தகமாக அமைந்துவிடும் என்று ஒரு அக்கறையும் இருக்கிறது. ஆனால் பொருளாதார உறுதிப்பாட்டுக்கான நம்பகத்தன்மையான சான்றுகளை காண முடியவில்லை.

பொதுமக்கள் எதிர்காலத்தில் நம்பிக்கை இழந்த நிலையில் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு கருத்துக்கணிப்பிலும் நம்பிக்கையில்லாத வாக்குகளை அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### நம்பிக்கை இல்லை

கேள்விக்கிடமின்றிய அதிகாரத்தை கெட்டியாக அரசாங்கம் பிடித்துக்கொண்டிருப்பதுடன் அரசாங்க ஆட்சியை நடைமுறைப்படுத்துவதற்கு கைதேர்ந்த முறையில் பாராளுமன்ற பெரும்பான்மையையும் பாதுகாப்பு படைகளையும் பயன்படுத்துகின்ற போதிலும், மக்களில் பெரும்பான்மையானவர்களின் ஆதரவு தனக்கு இருக்கிறது என்பதை காண்பிக்க அரசாங்கத்தினால் இயலாமல் இருக்கிறது.



**ஜனாதிபதி தேர்தலும் பாராளுமன்ற தேர்தலும் அடுத்த வருடம் நடத்தப்படும் என்ற ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் அறிவிப்பு புதிய ஒரு மக்கள் ஆணையைப் பெறாமல் அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதை நியாயப்படுத்த முடியாது என்ற புரிதலுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது என்பதன் வெளிப்பாடாகும்.**

தற்போதைய தருணத்தில் வேறு சிறந்த மாற்று இல்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்ட வர்த்தக மற்றும் சமூகத்தின் உயர் வர்க்கத்தவர்களின் ஆதரவு அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இருக்கிறது போன்று தெரிகிறது. இந்த கருத்து இராஜதந்திர வட்டாரங்களிலும் எதிரொலிக்கிறது.

ஆனால் இந்த உணர்வு கருத்துக்கணிப்புகளில் பிரதிபலிப்பதாக இல்லை. அரசாங்கத்துக்கும் அதன் தலைமைத்துவத்துக்கும் இருக்கக்கூடிய மக்கள் ஆதரவு 20 சதவீதத்தில் அல்லது அதற்கும் குறைவான வீதத்திலேயே காணப்படுகிறது என்பதை தொடர்ச்சியாக கருத்துக் கணிப்புகள் காண்பித்த வண்ணம் இருக்கின்றன. இதனால்தான் உள்ளூராட்சி தேர்தல்களையும் மாகாண சபை தேர்தல்களையும் நடத்துமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரிக்கிறது.

ஜனாதிபதி தேர்தலும் பாராளுமன்ற தேர்தலும் அடுத்த வருடம் நடத்தப்படும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு புதியதொரு மக்கள் ஆணையைப் பெறாமல் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதை நியாயப்படுத்த முடியாது என்ற விளக்கப்பாட்டுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது என்பதன் வெளிப்பாடாகும்.

பட்ஜெட்டும் கூட அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலுக்கும் பாராளுமன்ற தேர்தலுக்கும தயாராகிறது என்பதன் அறிகுறியாகும். மக்களில் பல்வேறு பிரிவுகளுக்கு பயன்களை கொடுக்கக்கூடிய முயற்சிகள் பட்ஜெட்டில் இருக்கின்றன. வளங்கள் போதாமல் இருக்கும் நிலையில் இந்த வாக்குறுதிகளை எவ்வாறு அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என்பது இன்னொரு கேள்வி.

அரச குத்தகைகளின் கீழ் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கு அந்த நிலங்களுக்கான உரிமப்பத்திரங்கைளை வழங்கப் போவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க உறுதியளித்திருக்கிறார். பொருளாதார நன்மைகளை மக்களுக்கு கொடுத்து அவர்களை வாக்களிக்கத் தூண்டுவது இலங்கையில் மாத்திரமல்ல உலகம் பூராவும் ஜனநாயக செயன்முறைகளின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

ஆனால் பொருளாதார நன்மைகளை வழங்குவதற்கு அரச அதிகாரத்தை கைதேர்ந்த முறையில் பயன்படுத்துவதும் புதிய சட்டங்களைக் கொண்டுவருவதற்கு பாராளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்துவதும் அந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பாதுகாப்பு படைகளை பயன்படுத்துவதும் மாத்திரம் ஆட்சிமுறையின் வெற்றிக்கான கூறு அல்ல. அதிகாரத்தில் இருப்பவர்கள் மீது மக்கள் நம்பிக்கை வைக்கவேண்டியதும் அவசியமாகும். இதற்கு சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கவேண்டும்.

சொல்வதைச் செய்யாமல் விடுவது தற்போதைய அரசாங்கத்தின் அம்சங்களில் ஒன்றாகும். எடுத்துக்காட்டாக அமைந்த ஊழலுக்கு எதிரான சட்டம் கீழ்மட்டத்தில் இருப்பவர்களை பிடிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை உயர்மட்டத்தில் இருப்பவர்கள் தொடர்ந்து தப்பித்துக் கொள்கிறார்கள்.

பரந்தளவில் மக்களை வறுமைக்குள் தள்ளிவிட்ட கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பானவர்களை அடையாளம் கண்டு உயர்நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தற்போதைக்கு அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதற்கான எந்த அறிகுறியையும் காணவில்லை.

### தீர்க்கப்படாத பிரச்சினை

இரு துறைகளில் அரசாங்கம் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவேண்டிய தேவை இருக்கிறது.

முதலாவது, பொருளாதார மறுசீரமைப்பின் சுமைகள் நேர்மையான முறையிலும் ஒப்புரவாகவும் பகிரப்படும் என்று மக்களை நம்பவைக்கவேண்டும். ஓய்வூதிய நிதியங்களான ஊழியர் சேமலாப நிதியத்தையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தையும் மறுசீரமைப்புக்கு உட்படுத்தும் நடைமுறை மக்களில் வறிய பிரிவினரை கடுமையாக பாதிக்கின்ற அதேளை வங்கித்துறையும் கோர்ப்பரேட் துறையும் மறுசீரமைப்பில் இருந்து விட்டுவைக்கப்பட்டிருக்கின்றன. வங்கித்துறை நிலைகுலைந்துவிடும் என்ற அச்சம் இதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

கம்பனிகள் பெற்றுக்கொண்ட பாரிய கடன்கள் வங்கிகளினால் உள்வாங்கப்பட்டிருப்பதாக இப்போது சான்றுகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி இதை அம்பலப்படுத்தியது. அவ்வாறு உள்வாங்கப்பட்டமை நியாயமற்றதாகும்.

இதையும் விருப்பத்துக்குரிய கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட வரி விடுமுறை உட்பட ஏற்றத்தாழ்வான ஏனைய நடவடிக்கைகளையும் சீர்செய்வதாக அரசாங்கம் உறுதியளிக்க வேண்டியது அவசியமாகும். முரண்பாடில்லாத முறையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதை எதிரணி கட்சிகள் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கான வாய்ப்பை அண்மைய பாராளுமன்ற விவாதங்கள் கொடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அரசாங்கம் கையாளவேண்டிய இரண்டாது விவகாரம் நாட்டின் இனப்பிரச்சினையாகும். பொருளாதாரப் பிரச்சினை மீது கவனம் முழுமையாக திரும்பியதன் காரணமாக தேசிய விவாதத்தில் இனப்பிரச்சினை பின்னரங்கத்துக்கு தள்ளப்பட்டுவிட்டது.

போர் ஒன்றை நடத்துவதற்கு பெருமளவு வளங்கள் செலவிடப்பட்டமையும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கான மூலவேர்க் காரணிகளில் ஒன்றாகும். இனங்களுக்கு இடையிலான நீதியையும் சமத்துவத்தையும் உறுதிசெய்யக்கூடிய கொள்கைகள் இருந்திருந்தால் போரை நடத்தவேண்டிய தேவை எழுந்திருக்காது.

பட்ஜெட்டில் பெரும் பகுதி தொடர்ந்தும் பாதுகாப்பு படைகளுக்கு ஒதுக்கப்படுகிறது. வேறுபட்ட இனத்தவர்களும் மதத்தவர்களும் வாழும் நாடுகள் என்று வரும்போது இலங்கை பிரத்தியேகமான நாடு அல்ல. மற்றைய நாடுகளிலும் பல இனத்தவர்களும் மதத்தவர்களும் வாழ்கிறார்கள். அந்த நாடுகள் குறிப்பாக பொருளாதார ரீதியில் வெற்றிபெற்ற நாடுகள் முழு சமுதாயத்துக்கும் பயன்தரக்கூடிய பேச்சுவார்த்தைகள் மற்றும் பரஸ்பர விட்டுக்கொடுப்புகள் மூலமாக தங்களது வேறுபாடுகளுக்கு தீர்வைக் காண்பதற்கான வழிகைகளை கண்டறிந்தன. இலங்கையில் மாகாணசபை தேர்தல்கள் ஐந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாக நடத்தப்படாமல் இருக்கிறது.

இன, மத சிறுபான்மை இனத்தவர்கள் இலங்கையின் அரசியல் சமுதாயத்தின் தவிர்க்கமுடியாத பிரிவினர் என்றும் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் என்றும் அவர்களை நம்பவைக்கவேண்டியது அவசியமாகும். மாகாணசபை தேர்தல்களை இன்னொரு இரு வருடங்களுக்கு ஒத்திவைக்கமுடியாது.

ஜனாதிபதி தேர்தலையும் பாராளுமன்ற தேர்தலையும் தொடர்ந்து மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க கூறுவதில் எந்தவிதமான தர்க்கநியாயமும் இல்லை

நாடு சுதந்திரம் அடைந்த உடனடியாக இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட தவறு இன்னமும் கூட சீர்செய்யப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் வறியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது மலையக தமிழர்கள் மிகவும் பின்தங்கிய பிரிவினராக இருக்கிறார்கள்.

வெளியில் இருந்து சென்றவர்களினால் கிழக்கில் மேய்ச்சல் நிலங்கள் அபகரிக்கப்படுவது தமிழர்களையும் முஸ்லிம்களையும் புண்படுத்தும் ஒரு பிரச்சினையாகும். அந்த பகுதிகளில் வசிப்பவர்களை பாதுகாக்க அவர்களுக்கு அரசாங்கம் இல்லை. பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்துடன் மக்களை ஐக்கியப்படுத்துவதற்கு நம்பிக்கையைக் கட்டியெழுப்ப இதுவல்ல வழி.

# கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அதிகரித்துவரும் டெங்கு நோயாளர்கள்

கொழும்பு, நவ. 30

கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள் 3,465 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக, வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

அதன்படி, தற்போது பெய்து வரும் அதிக மழையுடன் இந்த நிலைமை மேலும் அதிகரிக்க கூடும் எனவும் வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கொழும்பில் தற்போது 3,465 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் 80 வீதமானவர்கள் டெங்கு நோயாளர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

டிசெம்பரில் இது மேலும் அதிகரிக்கலாம் என்று எங்களுக்குத் தெரியும்.

இதற்கிடையில், 320 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் இருந்தனர். அவர்களுக்கு ஊட்டச்சத்து உணவுகளை வழங்கியதன் மூலம் குழந்தைகளின் எண்ணிக்கையை 102 ஆகக் குறைக்க முடிந்தது - என்றார். (அ)

# மருத்துவ கட்டளை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, நவ. 30

1927ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க மருத்துவ கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

முன்னாள் சுகாதார அமைச்சரினால் கடந்த ஒகஸ்ட் மாதம் 7ஆம் திகதி இதற்கான யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

அங்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக ஆராய்ந்து பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதற்கான பணிகளை, பிரதமரின் செயலாளர் தலைமையிலான குழுவொன்றிடம் ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, குறித்த குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், மருத்துவ கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன குறிப்பிட்டர். (அ)

# தெலுங்கானா: பா.ஜ.க.வை முந்திய காங்கிரஸ்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

4. இந்திரம்மா இந்துலு திட்டத்தின் கீழ் தெலங்கானா மாநில தியாகிகளுக்கு 250 சதுர அடி நிலம் வழங்கப்படும். வீடு இல்லாதவர்களுக்கு நிலமும் ஐந்து லட்ச ரூபாய் பணமும் அளிக்கப்படும்.

5. யுக விகாசம் திட்டத்தின் கீழ் வேலையில்லாத இளைஞர்களுக்கு உதவிசெய்யப்படும்.

6. செய்யுதா என்ற திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகையாக மாதம் 4 ஆயிரம் ரூபாய் தரப்படும்.

**பா.ஜ.கவின் வாக்குறுதிகள்**

1. இஸ்லாமியர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் 4 சதவீத தனி இட ஒதுக்கீடு ஒழிக்கப்பட்டு பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தோர் இட ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்.

2. உஜ்வாலா திட்டத்தின் கீழ் வருடத்திற்கு நான்கு எரிவாயு சிலிண்டர்கள் இலவசமாக அளிக்கப்படும்.

3. மாநிலத்தில் பொது சிவில் சட்டம் செயல்படுத்தப்படும்.

4. ஹைதராபாத் விடுதலை தினம் அரசால் கொண்டாடப்படும்.

5. பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு இலவச லேப்டாப் வழங்கப்படும்.

ஆக, பிஆர்எஸ் அரசின் சமூக நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட விதம், அக்கட்சி மீதான ஊழல் குற்றச்சாட்டுகள், பி.ஆர்.எஸும் காங்கிரசும் முன்வைத்துள்ள தேர்தல் அறிக்கைகள் ஆகியவை இந்தத் தேர்தலில் முக்கியப் பேசுபொருளாக இருக்கின்றன.

ஆந்திராவிலிருந்து பிரிந்து, தெலங்கானா என்ற மாநிலத்தை உருவாக்க 2001ல் துவங்கப்பட்டது தெலங்கானா ராஷ்ட்ரிய சமிதி. இந்த நிலையில், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் கட்சியின் பெயரை பாரத ராஷ்ட்ரிய சமிதி என்று மாற்றினார் கே. சந்திரசேகர ராவ்.

"தேசியப் பிரச்சனைகளை மாநில மட்டத்தில் விவாதிக்க ஏதுவாக இதனைச் செய்தார்கள். மேலும் பிற மாநிலங்களிலும் சில நாடாளுமன்ற இடங்களை வெல்ல நினைத்தார்கள். ஆனால், கே.சி.ஆர். தனது உள்ளூர் அடையாளத்தை இழந்துவிட்டார். மக்கள் இப்போது அதனை தெலங்கானாவுக்கே உரிய கட்சியாகப் பார்ப்பதில்லை" என்கிறார் எம். கோதண்டராம்.

இந்தத் தேர்தலின் முடிவுகள், மாநிலத்தோடு நின்றுவிடாமல் தேசிய அளவிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், பி.ஆர்.எஸ். - காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளுமே வாழ்வா, சாவா என்ற தீவிரத்துடன் இந்தத் தேர்தலை எதிர்கொள்கின்றன.

தெலங்கானா மாநிலத்திற்கான வாக்குப் பதிவு நவம்பர் 30ஆம் தேதி நடக்கவிருக்கிறது. முடிவுகள் டிசம்பர் 3ஆம் தேதி வெளியாகும்.



